தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 15/- | மலர் 17 - இதழ் 01 - மே 2015 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

என்ன படிக்கலாம்...?

அறிவுக்கண் திறக்கும் கல்வியைப் போற்றிடுவோம்...

அனைத்து வங்கி சேவைகளும் ஒரே இடத்தில்...
பாரதீய மகிளா வங்கி லிமிடெட்.

உங்கள் சேமிப்பிற்கு அதிக வருவாய்.

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

5 % * p.a
₹1 லட்சத்துக்கும் அதிகமான தொகைக்கு

4.5 % p.a
₹1 லட்சம் வரை

*வங்கிக் கணக்கில் உள்ள மொத்த தொகைக்கும் 5%

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB SILVER SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB GOLD SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB Komal Kali

உங்களின் மகளுக்கு சுதந்திரத்தின் சிறகுகளை அளித்திடுங்கள்

பெண் குழந்தைகளுக்கு சுய அதிகாரம் வழங்கும் ஒரு புதுமையான ரெக்கரிங் டெபாஸிட்

• வயது : ஒரு நாள் குழந்தை முதல் 15 வயது வரை • குறைந்தபட்ச மாதாந்திர முதலீடு ரூ. 50 அல்லது அதற்கும் அதிக தொகை, மிகச் சரியாக ரூ. 50-ன் பெருக்குத் தொகை • மாதத் தவணையை மாதத்தின் எந்த தேதியில் வேண்டுமானாலும் செலுத்தும் வசதி • காலம் : 3 ஆண்டுகள் முதல் பத்தாண்டுகள் வரை • கடன் வசதி உண்டு : மொத்த மதிப்பின் 85% (தனி நபர் விபத்து காப்பீடு) • TDS இல்லை

இணையதளம்: www.bmb.co.in
https://bmbsmartbanking.co.in/netbanking

பிஎம்பி
பாரதீய மகிளா வங்கி
மகளிருக்கு சுய அதிகாரம், பாரதத்தின் சுய அதிகாரம்.
முற்றிலும் இந்திய அரசுக்குச்சொந்தமானது

BMB
BHARATIYA MAHILA BANK
Empowering Women, Empowering India.
Wholly owned by Govt. of India

சென்னை கிளை : ஓவர்சீஸ் டவர்ஸ், 756-L, அண்ணா சாலை,
சென்னை - 600 002. தொலைபேசி : 044 28523321

கோயமுத்தூர் கிளை : தேவராஜன் சென்டர், ஐயப்ப பூஜா சங்கம் அருகில், 206/1,
சத்யமூர்த்தி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர் - 641 009 தொலைபேசி : 0422-4373749/29

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்பு தோழிகளே,

நமது மாநிலத்தில் சுமார் ஆறு இலட்சம் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்த, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதில் ஒன்றுதான் மாநில அளவிலான கண்காட்சி ஆகும்.

கடந்த ஒரு மாத காலமாக சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை விற்பனை செய்யும் கண்காட்சி சிறப்பாக நடைபெற்றது. இதில் 32 மாவட்டங்களில் இருந்தும் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று, தங்களின் தயாரிப்புகளை விற்பனை செய்தனர். இந்தக் கண்காட்சியில் சுமார் 45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

இந்தக் கண்காட்சியில், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், திண்டுக்கல், ஈரோடு மாவட்டங்களில் இருந்து பருத்தி புடவைகள், திருப்பூர் ஆயத்த ஆடைகள், அரியலூர் முந்திரி, கடலூரில் இருந்து செராமிக் பொம்மைகள், இன்னபிற மாவட்டங்களில் இருந்து பனை ஓலை பொருட்கள், ஊறுகாய் வகைகள், செயற்கை ஆபரணங்கள், மூலிகைப் பொருட்கள், பித்தளை விளக்குகள், சிறு தானியங்கள், புளி, மிளகாய் மற்றும் பலவிதமான உணவுப் பொருட்கள் ஆகியவை விற்பனை செய்யப்பட்டன.

இந்தத் தகவல் உங்களை உற்சாகப்படுத்த வேண்டும். உங்களைப் பலவிதமான பொருட்களைத் தயாரிக்க ஊக்கப்படுத்த வேண்டும். நீங்களும் இந்த கண்காட்சியில் பங்கேற்று, உங்களின் தயாரிப்புகளை விற்பதன் மூலம், உங்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்ற ஆவலில்தான் இந்தத் தகவலை இங்கே சொல்கிறேன்.

மாநில அளவில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் புத்தாண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டும், கோடையில் ஏப்ரல், மே மாதங்களில் வரும் விடுமுறை நாட்களைக் கணக்கில் கொண்டும், நவராத்திரியை முன்னிட்டு அக்டோபர் மாதத்திலும் என மூன்று கண்காட்சிகள் உங்களுக்காகவே நடத்தப்படுகிறது.

நீங்கள் தரமான பொருட்களை தயாரித்து, அதற்கு நியாயமான விலையை நீங்களே நிர்ணயம் செய்து, விற்பதன் மூலம், உங்களின் பொருளாதாரம் உயரும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை.

உங்களின் கனவு என்ன?

அதை நனவாக்க, உங்களுக்குத் தேவையான பயிற்சி என்ன?

அந்தப் பயிற்சியில் கற்ற தொழிலை செயல்படுத்த உங்களுக்குத் தேவையான நிதி எங்கே கிடைக்கும்?

நீங்கள் தயார் செய்த பொருட்களை எங்கே எப்படி விற்பனை செய்யலாம்?

இந்த வினாக்களுக்கு எல்லாம் விடை காண உங்கள் மாவட்டத்தில் உள்ள மகளிர் திட்ட மேலாளர் அல்லது புதுவாழ்வு திட்ட மேலாளரை அணுகுங்கள். தேவையான விபரங்களைப் பெற்று உடனே செயலில் இறங்குங்கள்.

வெற்றிப் பாதை உங்களுக்காக காத்திருக்கிறது.

அடுத்து வரும் நவராத்திரியை முன்னிட்டு நடைபெறும் கண்காட்சியில், இன்னும் அதிகமான குழுக்கள் கலந்து கொண்டு, கூடுதலான பொருட்களை விற்பனை செய்வீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் சாதனைகளைக் கண்டு களிக்க காத்திருக்கிறேன்.

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 17–இதழ்–01–மே 2015

விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்

வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்

எஸ். சின்னப்பன்

செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்

டபிள்யூ. சிராஜுன்னிசா

பொது மேலாளர்

ஆசிரியர் குழு

டீ. ஆர். வேதநாயகம்

கூடுதல் இயக்குநர்

எம். மாதவி

கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்

எல். ராஜா

கூடுதல் திட்ட இயக்குநர்

ஆர். ராஜசேகர்

கூடுதல் திட்ட இயக்குநர்

மோ. கணேஷ்குமார்

தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்

ப. கலைமதி

மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்

ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்

சு. சசிகலா

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)

மு. செல்வம்

பிழை திருத்துபவர்

எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்'

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம்,

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை

நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி: 044–2817 3412 / 3413

தொலைநகல்: 044–2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

கல்வியின் தரம் மேலும் உயர...?

அன்புள்ள வாசகர்களுக்கு,

தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ள உங்கள் பிள்ளைகளுக்கு முற்றம் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது. கல்வி ஆண்டு தொடங்கி விட்ட நிலையில் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை, சிறந்த கல்வி நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பது, தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி கட்டணத்தை தயார் செய்வது, தாங்கள் விரும்பிய பாடங்களைத் தேர்வு செய்வது போன்ற பரபரப்பான செயல்பாடுகளை பெற்றோர்களும் மாணவர்களும் மேற்கொண்டிருக்கும் மாதம் இது.

கல்வியின் முக்கியத்துவம் அனைவராலும் உணரப்பட்டு விட்டதால், பணத்தையும் நேரத்தையும் செலவழித்து தரமான கல்வி தங்கள் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதில் பெற்றோர்கள் தெளிவாக இருக்கின்றனர். தரமான கல்வியை வியாபார நோக்கமற்ற நல்ல கல்வி நிறுவனங்களால் மட்டுமே கொடுக்க முடியும். ஆரம்ப கல்வி மிகவும் தரம் வாய்ந்ததாக இருந்தால் மட்டுமே உயர் கல்விக்கு செல்லும் போது மாணவர்களின் திறமைகள் வெளிக்கொணரப்படும். எனவே, ஆரம்ப கல்வியினைக் கொடுக்கும் பள்ளிக் கூடங்கள் தரமான கல்வியைக் கொடுக்க வேண்டுமெனில், பள்ளிக் கூடங்கள் மக்களின் பங்கேற்போடு நடைபெற வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பள்ளிகளுக்குச் சென்று பள்ளிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்யலாம். மகளிர் குழு கூட்டமைப்புகள் கல்வி குழுவில் சேர்ந்து பள்ளியின் வளர்ச்சிக்கு ஆலோசனைகள் மற்றும் நன்கொடைகளை பெற்றுத் தந்து பள்ளிக்கு உதவலாம். அனைத்துப் பெற்றோர்களும் காலாண்டு மற்றும் அரையாண்டு தேர்வுகளுக்குப் பின்பு பள்ளிக்குச் சென்று ஆசிரியர்களை சந்தித்து, தங்கள் குழந்தைகளின் நடவடிக்கை, படிப்பில் காட்டும் அக்கறை, ஒழுக்கம், தனித்திறமை ஆகியவைகள் பற்றி விவாதித்துத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

அரசு பள்ளிகளில் மாணவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசாங்கமே செய்து வருவதால் பல பெற்றோர்கள் பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர் என்பது வருத்தத்திற்குரியதாகும். மாணவர்களை ஊக்கப்படுத்த பத்தாம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி கொடுப்பதை பல ஆசிரியர்கள் தவறாகப் பயன்படுத்துவது கண்காணிக்கப்பட வேண்டிய மற்றொரு முக்கியமான ஒன்றாகும். கல்வி அதிகாரிகளால் நிர்வகிப்படும் பள்ளி கல்வி முறையானது மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டால் மட்டுமே தரமான கல்வியைக் கொடுக்க முடியும்.

எட்டு மணி நேரம் பள்ளியில் செலவழித்து விட்டு மாலை வீடு திரும்பிய பிறகும் குழந்தைகள் தனிப்பட்ட முறையில் வீடுகளிலோ அல்லது சில தனியார் நிறுவனங்களிலோ இரவு நேரங்களில் படிப்பைத் தொடர்வது எந்த அளவிற்கு உகந்தது என்பதை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதில் எந்த இடத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதை ஆராய வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்


केनरा बैंक
(भारत सरकार का उपक्रम)
Canara Bank
(A Government of India Undertaking)
Together We Can
CANARA JEEVAN DHARA
A Special SB Account
for Senior Citizens
Free Senior Citizen ATM/Debit Card with Photo ID
Issue of name printed cheque book
Free Personal Accident Insurance coverage*
Locker facility at concessional rate*
Health Insurance - Available at concessional premium rate
*conditions apply
Toll Free: 1800 425 0018
Save Trees. Save Water. Save Environment
www.canarabank.com

உள்ளே...

மலைகளின் அரசி நீலகிரி	8
கல்வியைப் போற்றிடுவோம்	10
சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்	14
மாவட்ட செய்திகள்	20
சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்	24
புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள்	29
கால்நடைப் பராமரிப்பு	34

அழகு...அழகு...

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

பல்வேறு சாதனைகளை படைத்து வரும் சுய உதவிக் குழு மகளிரின் வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவக் குறிப்புகள், நடப்புச் செய்திகள் போன்றவற்றை மாதந்தோறும் வெளியிட்டு சுய உதவிக் குழு மகளிருக்கு சிறந்த வழிகாட்டியாக முற்றம் இதழ் திகழ்கிறது.

சங்கீதா குருமூர்த்தி,
முத்துச்சிப்பி மகளிர் சுய உதவிக் குழு,
தோவாளை, கன்னியாகுமரி மாவட்டம்

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளின் வாயிலாக வாழ்வில் வளம் பெற்று வரும் கிராமப்புற ஏழை மக்களின் வெற்றிக் கதைகளை மாதந்தோறும் வெளியிட்டு, அவர்களுக்கு ஊக்கம் அளித்து வரும் முற்றம் இதழுக்கு வாழ்த்துகள்.

மீனாட்சி விஜயகுமார், செயலாளர்,
கிராம வறுமை ஒழிப்பு சங்கம்,
மேட்டூர், சேலம் மாவட்டம்.

கோடை வெயிலில் இருந்த சருமத்தைப் பாதுகாக்க, இயற்கை பொருட்களைப் பயன்படுத்துவத செய்திகளும், கழிப்பறைகளின் அவசியம் குறித்த கட்டுரையும் அருமையாக இருந்தது. இதுபோன்ற பயனுள்ள செய்திகளை வெளியிட்டு வரும் முற்றம் பத்திரிகைக்கு எங்கள் நன்றி.

கிருஷ்ணவேணி முருகன்,
பஞ்சவர்ணம் மகளிர் மன்றம்,
திருத்தவெளி, காஞ்சிபுரம் மாவட்டம்.

கடலோர பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளையும், அவற்றின் மூலம் இளைஞர்களுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்பு பயிற்சிகள் குறித்த செய்திகளும் முற்றம் இதழ் சிறப்பாக வெளியிடுகிறது.

திருமதி. செல்வ நாயகி (ஊக்குனர்),
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
தேவிபட்டினம், இராமநாதபுரம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

உலக தந்தையர் தினம்

ஜூன்
19

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அன்னையர் தினத்தை முழுமைப்படுத்த, தந்தையர் தின கொண்டாட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டது. தந்தையர் மற்றும் முன்னோர்களை நினைவுகூரும் நாளாகவும் இந்த தினம் கொண்டாடப்பட்டு சிறப்பிக்கப்படுகிறது. உலகளவில் இத்தினம் பல்வேறு தேதிகளில் கொண்டாடப் பட்டாலும், முதல் தந்தையர் தினம் ஜூன் 19, 1910 அன்று கொண்டாடப் பட்டதாக தெரிய வருகிறது.

வாஷிங்டனைச் சேர்ந்த சோனரோ ஸ்மார்ட் டோட் என்பவர் 1909 ஆம் ஆண்டில் விடுமுறை நாளான ஒரு ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் அன்னையர் தினம் குறித்த போதனையைக் கேட்டுக் கொண்டிருந்தபோது தந்தையர் தினம் கொண்டாடுவது குறித்த எண்ணம் தோன்றியது. ஜூன் 19, 1910 அன்று அவருடைய தந்தைக்காக ஒரு புகழுரையை ஏற்பாடு செய்தார். அதிகாரப்பூர்வ மாக தந்தையர் தினத்தை கடைப்பிடித்து அனைத்து தந்தையர்களையும் கௌரவப்படுத்துவதற்கான யோசனையை இவரே முதன் முதலில் பரிந்துரைத்தார். எனினும் இது அதிகாரப்பூர்வம் ாக அறிவிக்கப்படுவதற்கு பல ஆண்டுகள் ஆனது.

இருந்தபோதும் YWCAஇல் இருந்த ஆதரவால் YMCA மற்றும் தேவாலயங்கள் போன்ற இடங்களில் இது காலண்டர்களில் இல்லாத போதும் கொண்டாடப்பட்டது. அன்னையர் தினம் மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடப்பட்ட போது, தந்தையர் தினம் குதூகலமாய் கொண்டாடப்பட்டது. தவறான காரணங்களுக்காக இதற்கான விடுமுறைகள் மெதுவாக கவனம் பெறத் துவங்கியது.

1913ஆம் ஆண்டில் இதற்கான ஒரு மசோதா அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி திரு. கல்வின் கூலிட்ஜ் 1924ஆம் ஆண்டில் இத்தினத் திற்கு ஆதரவளித்தார். இதன் விடுமுறையை சட்டமயமாக்குவதற்காக வாணிக அமைப்புகளால் இதற்கான தேசிய செயற்குழு 1930ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

1966ஆம் ஆண்டில் ஜனாதிபதி லிண்டன் ஜான்சன் இதற்கு பெடரல் விடுமுறை அனுசரிக்கப்பட போவதாக பொது அறிவிப்பை வெளியிட்டார். தற்போது தந்தையர் தினம் உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் தந்தையருக்கு பரிசுகள் வழங்குதல், விருந்தளித்தல், சிறப்பித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ■

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அன்னையர் தினத்தை முழுமைப்படுத்த, தந்தையர் தின கொண்டாட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தந்தையர் மற்றும் முன்னோர்களை நினைவுகூரும் நாளாகவும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

ஜூன்
12

குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்

ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பினால் (ஐ.எல்.ஓ.) அங்கீகரிக்கப்பட்ட இந்த நாள் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 2002ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது. ஐ.எல்.ஓ.வின் 138 மற்றும் 183வது உடன்படிக்கைகளின் ஏற்பினால் தூண்டப்பட்ட இந்த நாள் உருவாக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்த இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2006ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் தேதி முதல் வீடு, சாலையோர கடைகள், உணவகங்கள் போன்ற இடங்களில் சிறுவர் மற்றும் சிறுமியர்களை வேலைக்கு அமர்த்த மத்திய அரசு தடைவிதித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்

குழந்தைகள் நலனுக்காக செயல்படும் சர்வதேச அமைப்பான யுனிசெப் நிறுவனம் குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடல் ரீதி யான பாதிப்பு, உளவியல் அல்லது மனரீதியான பாதிப்பு மற்றும் உணர்வு மற்றும் சமூக ரீதியான பாதிப்பு என மூன்று வகையாகப் பிரித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர்கள் குறித்து நாம் கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள்

சிறார் அனைவருக்கும் தொடக்கக் கல்வி கட்டாயம் ஆக்கப்பட வேண்டும்.

சிறுவர்களின் தொழில் திறமைகளைக் கண்டறிந்து அவர்களின் திறமைகளை வளர்க்க பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.

கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.

'குழந்தைகள் உங்களுக்குப் பிறந்தவர்கள்தான். ஆனால் உங்களுக்காக மட்டுமே பிறந்தவர்கள் அல்ல' என்பதை பெற்றோர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

மேற்கண்ட நடவடிக்கைகளில் சிறப்பு கவனம் செலுத்தப் பட வேண்டும் என்று யுனிசெப் நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. எனவே குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க நாம் அனைவரும் இத்தினத்தில் சூளுரை ஏற்பதுடன், அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். ■

இந்தியாவின் இரண்டாவது உயரமான சிகரம் நீலகிரி தொட்டபெட்டா ஆகும்.

மலைகளின் அரசி
நீலகிரி

நீலகிரி மலையைக் காண்பதற்கு நீலமாக இருப்பதால் 'நீலகிரி' என அழைக்கப்படுகிறது. மலைகளின் அரசியான ஊட்டி சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபுரியாகத் திகழ்கிறது. உடலை வருடும் இதமான தென்றல், பச்சைப் பசேலென்ற நெடிய அரிய வகை மரங்கள், அதனைச் சுற்றி படர்ந்துள்ள செடி, கொடிகள் என இவையெல்லாம் ஊட்டியின் அக்மார்க் முத்திரைகள்.

நீலகிரி மலையைக் காண்பதற்கு நீலமாக இருப்பதால் 'நீலகிரி' என அழைக்கப்படுகிறது. மலைகளின் அரசியான ஊட்டி சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபுரியாகத் திகழ்கிறது. உடலை வருடும் இதமான தென்றல், பச்சைப் பசேலென்ற நெடிய அரிய வகை மரங்கள், அதனைச் சுற்றி படர்ந்துள்ள செடி, கொடிகள் என இவையெல்லாம் ஊட்டியின் அக்மார்க் முத்திரைகள்.

மேட்டுப்பாளையத்தில் இருந்து நீலகிரி மாவட்டத்தின் குன்னூர், கூடலூர், கோத்தகிரி என்று மலை வாசஸ்தலங்களுக்கு போகும்போது சாலையின் இருபுறமும் வளர்ந்துள்ள பல்வேறு வகையான தாவரங்களும், ஆங்காங்கே கொட்டும் அருவிகளும் நம்மை சொர்க்கத்திற்கே அழைத்துச் செல்கின்றன. கல்லாறு, பரளியாறு, காட்டேரி பூங்கா என நாம் செல்லும் பாதையில் பல்வேறு இயற்கை அழகு நிறைந்துள்ள காட்சிகளைக் காணலாம்.

நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் அமைந்துள்ள சிம்ஸ் பார்க் இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் சுற்றுலாத் தலமாகும். வண்ண மலர்கள் நிறைந்த செடிகள், ஓங்கி உயர்ந்த மரங்கள், வெளிநாட்டு தாவரங்கள், குழந்தைகள் விளையாட விளையாட்டு சாதனங்கள், வண்ண மீன்கள் நிறைந்த குளம் போன்றவை சிம்ஸ் பார்க்கில் உள்ளன.

குன்னூரில் உள்ள டால்பின் நோஸ் என்ற இடத்தில் இருந்து பார்க்கும் போது மேகங்கள் மூடிய மலைகளும், பச்சைப் பசேலென்ற வனப்பகுதிகளும், நெளிந்து ஓடும் ஆறுகளும் நம்மை பரவசத்தில் ஆழ்த்துகின்றன.

இந்தியாவின் இரண்டாவது உயரமான சிகரமாக கருதப்படும் தொட்டபெட்டாவில் அமைந்துள்ள பார்வை மாடத்தில் தொலைநோக்கி வழியாகப் பார்த்தால் பரந்து விரிந்து கிடக்கும் தேயிலைத் தோட்டங்களும், குன்னூர் மற்றும் கோத்தகிரி ஆகிய நகரங்களும் தெரியும்.

ஊட்டிக்கு செல்பவர்கள் தவறாமல் பார்க்க வேண்டிய இடம் படகு பூங்கா. சுற்றிலும் மலைகள் சூழ்ந்திருக்க நடுவில் அமைந்துள்ள ஏரியில் மிதி படகு, துடுப்பு படகு, இயந்திர படகு போன்றவற்றில் பயணம் செய்தவாறு இயற்கை அழகை ரசிக்கலாம். ஏரியின் அருகில் உள்ள பூங்காவில் குழந்தைகள் விளையாட பல்வேறு விளையாட்டு சாதனங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஊட்டியில் காண வேண்டிய மற்றொரு இடம் ரோஜா பூங்கா எனும் ரோஸ் பார்க். ஆயிரத்திற்கும் மேற்பட்ட வகை ரோஜா மலர்கள் அணிவகுத்து நிற்கும் ரோஜாக் கண்காட்சியினை காண நம் நாடு மட்டுமின்றி வெளிநாட்டினரும் வருகை தருகின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் மலர்க் கண்காட்சிக்கு இலட்சக்கணக்கானவர்கள் வருகின்றனர். ■

வண்ண மலர்கள் நிறைந்த செடிகள், ஓங்கி உயர்ந்த மரங்கள், வெளிநாட்டு தாவரங்கள், குழந்தைகள் விளையாட விளையாட்டு சாதனங்கள், வண்ண மீன்கள் நிறைந்த குளம் போன்றவை சிம்ஸ் பார்க்கில் உள்ளன.

ஊட்டியின் பிரதான பொழுதுபோக்கு பூங்காவாக தாவரவியல் பூங்கா (பொட்டானிக்கல் கார்டன்) திகழ்கிறது. வெளிநாட்டு தாவர வகைகளும், நூறு ஆண்டுகளைக் கடந்த மரங்களும், அரிய வகை செடி கொடிகளும், பல்வேறு வண்ண மலர்களும், பரந்த விரிந்த புல்வெளியும் என இப்பூங்கா சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்றது.

நீலகிரி மலைத் தொடரின் சிறப்பு மிகுந்த இடங்களில் கோத்தகிரியும் ஒன்றாகும். இப்பகுதியில் குறும்பர், தோடர், பளியர், இருளர் போன்ற பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் பழம்பெரும் நாகரீகத்தை, கலாச்சாரத்தை, பண்பாட்டை இன்றளவும் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் முதல் வனவிலங்கு சரணாலயம் என்ற சிறப்புப் பெற்ற முதுமலை வனவிலங்கு சரணாலயம் ஊட்டியில் இருந்து 36 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மூன்று மாநிலங்களின் எல்லைகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள இந்த சரணாலயத்தில் யானை, சிறுத்தை, புள்ளி மான், கோழையாடு, கரடி, காட்டுப்பன்றி போன்ற பல்வேறு விலங்குகளும், கொம்பிறகுப் பறவை, குயில் வகைகள், காட்டுக் கோழிகள் போன்ற பறவையினங்களும் வாழ்கின்றன. யானைச்சவாரி மூலம் முதுமலையின் அழகைக் கண்டுகளிக்கலாம்.

ஊட்டிக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் விரும்பும் மற்றொன்று 'ஊட்டி மலை ரயில்' உலகின் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றான இந்த இரயிலில் பயணம் செய்யும் போது நீலகிரி மலையின் அழகை முழுவதுமாகக் கண்டுகளிக்கலாம்.

மேலும், லாஷ் நீர்வீழ்ச்சி, லாம்ஸ் முனை, பகாசுரன் மலை, காட்டேரி அருவி, கோடநாடு காட்சி முனை, குதிரைப் பந்தய மைதானம், கேத்திப் பள்ளத்தாக்கு, கல்கட்டி அருவி, அவலாஞ்சி, மேல் பவானி, முக்குர்த்தி தேசிய பூங்கா, அருங்காட்சியகம், பைகாரா நீர் வீழ்ச்சி, ஊசிமுனைப் பாறை, தூரப்பள்ளி தொங்கு பாலம், நெல்லியாலம், பண்டலூர், சேரம்பாடி, தேவலா, லாங்உட் சோலை, டைகர் ஹில் போன்ற இடங்களும் நீலகிரி மாவட்டத்தின் மிகச்சிறந்த சுற்றுலாத் தலங்களாக விளங்குகின்றன. ■

கால்நடை நலம்...!

சரஸ்வதியின் சபதம்...! (நாடகம்) சென்ற இதழ் தொடர்ச்சி...

(இடம் : கிராம வறுமை ஒழிப்புச் சங்கக் கட்டிடம்)

கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

வீராசாமி: இந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கக் கூட்டத்திற்கு வந்துள்ள அனைவருக்கும் வணக்கம். இந்தக் கூட்டத்தை தலைமையேற்று நடத்திட நமது அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும், நேசத்திற்கும், நட்புக்கும், நாட்டாமைக்கும் உரிய...

ஊராட்சி மன்றத் தலைவர்: போதும்பா... வீராசாமி விஷயத்திற்கு வாப்பா...

வீராசாமி: நமது ஊராட்சி மன்ற தலைவர் அவர்களை இந்தக் கூட்டத்தை தலைமையேற்று நடத்தித் தருமாறு நம் அனைவரின் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்றத் தலைவர்: நமது 'கிராம வறுமை ஒழிப்புச் சங்க' கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம். கிராமப்புற ஏழை எளிய மக்களின் வறுமையைப் போக்க, நமது தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவைகள் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவைகளில் மிகச் சிறந்த திட்டம் என இந்த 'கிராம வறுமை ஒழிப்பு சங்கம்' அமைக்கும் திட்டத்தைக் கூறலாம். காரணம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மக்களை, மக்கள் பங்கேற்புடன் கண்டறிந்து, அம்மக்களுக்கு ஒரு வலுவான மக்கள் அமைப்பை ஏற்படுத்தி, அந்த மக்கள் அமைப்பின் மூலமாக, இலாபம் தரக்கூடிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, அதன் மூலம் ஏழை மக்களின் வறுமையைப் போக்குவதே இச்சங்கத்தின் தலையாய நோக்கமாகும். இவைகளைக் கண்காணிப்பதற்காக நம் மக்களைக் கொண்டே ஒரு 'மக்கள் தணிக்கைக் குழுவை' ஏற்படுத்தியுள்ளோம். இந்தச் சங்கம் அமைப்பதற்காக ஊராட்சி துவக்க நிதி என ரூ. 35,000/– நமது மாவட்ட மகளிர் திட்ட அலவலகத்திலிருந்து வழங்கப்பட்டது.

வீராசாமி: அய்யா... அது என்ன கணக்கு 35,000/–

ஊராட்சி மன்றத் தலைவர்: வீராசாமி... ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை கணக்குப்படி இந்தப் பணம் வழங்கப்படுகிறது. அதாவது 2000 மக்கள் தொகைக்கு ரூ. 25,000/–, 2001லிருந்து 4000 வரை மக்கள் தொகை இருந்தால் ரூ. 35,000/–, 4000க்கு மேல் மக்கள் தொகை இருந்தால் ரூ. 45,000/– என்ற விகிதாச்சாரத்தில் இந்தப் பணம் வழங்கப்படுகிறது. இந்த பணத்தின் மூலம் தான் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் குறிக்கோள்களை கிராம மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் நோட்டீஸ் அடிப்பது, சுவர்களில் விளம்பரம் செய்வது போன்ற பணிகளைச் செய்யணும். இதுமட்டுமில்லாமல் கலைநிகழ்ச்சிகள் மூலமாகவும் இத்திட்டக் கோட்பாடுகளை மக்களுக்கு தெரியப்படுத்தணும். ■

(தொடரும்)

டாக்டர். P. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

இந்த பணத்தின் மூலம் தான் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் குறிக்கோள்களை கிராம மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் நோட்டீஸ் அடிப்பது, சுவர்களில் விளம்பரம் செய்வது போன்ற பணிகளைச் செய்யணும். இதுமட்டுமில்லாமல் கலைநிகழ்ச்சிகள் மூலமாகவும் இத்திட்டக் கோட்பாடுகளை மக்களுக்கு தெரியப்படுத்தணும்.

கல்விச் செல்வம் மட்டுமே மற்றவர்களுக்கு கொடுத்தாலும் குறையாதது.

என்ன படிக்கலாம்...?

அறிவுக்கண் திறக்கும்

கல்வியைப் போற்றிடுவோம்...

நாள்தோறும் நவீனமடைந்து வரும் உலகத்தில், பல்வேறு துறைகளிலும் உள்ள நுட்பங்களை அறிந்து கொள்ள நமக்கு உறுதுணையாக இருப்பது நாம் கற்கும் கல்வியாகும். கல்விச் செல்வம் மட்டுமே அனைத்து செல்வங்களிலும் சிறந்தது ஆகும். "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள் 398) என்ற குறள் மொழிக்கேற்ப ஒருதலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமைகிறது.

கல்விச்செல்வம்மட்டுமேமற்றவர்களுக்குகொடுத்தாலும்குறையாதது. பிறருக்கு கொடுக்கக் கொடுக்க வளரக் கூடியது. யாராலும் களவாட முடியாதது. எந்த நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ அந்நாடு அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக உருவாகும். அதேபோல் பெண்களுக்குக் கல்வி அறிவு கொடுப்பதன் மூலம், அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை அளிக்க முடியும். எனவே பெண்களுக்குக் கல்வி அறிவினை அளிப்பதற்கு நாம் என்றும் முன்னிற்க வேண்டும்.

இன்றுஅனைத்துத்துறைகளிலும்வேகமானவளர்ச்சிகாணப்படுகிறது. அவைகளில்வேலைவாய்ப்புகளும்ஏராளமாககுவிந்துகிடக்கின்றன. அத்துறைகளில் உள்ள அறிவியல் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் அறிவினை அளிக்கும் கல்வி நிறுவனங்களும் நம் நாட்டில் ஏராளமாய் உள்ளன. குறிப்பாக தமிழகத்தில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் பல்வேறு துறைகளுக்கும் தகுதி வாய்ந்தவர்களை உருவாக்கி வருகின்றன. பல்வேறு வகையான படிப்புகளை வழங்கும் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும்

> எந்த நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ அந்நாடு அனைத்து வளங்களையும் கொண்ட நாடாக உருவாகும்.

நம் மாநிலத்தில் அதிகளவில் உள்ளன. அவைகளில் சேர்ந்து பயில்வதற்காக நாட்டின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் அயல்நாடுகளில் இருந்தும் ஏராள மானவர்கள் வருகின்றனர்.

12ஆம் வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு முடித்த மாணவர்கள் அனைவருக்கும் இது முக்கியமான முடிவினை எடுக்கும் காலகட்டமாகும். +2 முடித்தவர்கள், தங்களுக்கு விருப்ப மான பட்டப்படிப்பைப் பயில தகுதியான கல்லூரியைத் தேடுகின்றனர். பட்டப் படிப்பை முடித்தவர்களோ,

சிறந்த வேலை வாய்ப்பைத் தரக்கூடிய உயர் கல்வியை நாடுகின்றனர். இத்தகைய மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு படிப்புகள் குறித்த பயனுள்ள விபரங்களை இவ்விதழில் காணலாம்.

மருத்துவம்

இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த படிப்பாக மருத்துவம் கருதப்படுகிறது. பொது மருத்துவம், பல் மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம் போன்றவை குறித்த படிப்புகளுக்கு சிறப்பான வரவேற்பு உள்ளது. பல்வேறு நோய்களுக்கு மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சை குறித்த படிப்புகளைக் கற்பிக்கும் நமது மாநிலத்தில் உள்ள கல்விக்கூடங்களில் சேர்ந்து பயில அயல்நாட்டைச் சேர்ந்த ம ாணவர்களும் விரும்புகின்றனர் என்பது நமக்குப் பெருமையான செய்தியாகும்.



மருத்துவராக வேண்டுமெனில் மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சைப் படிப்பில், இளநிலைப் பட்டம் (எம்.பி.பி.எஸ்.) பெற்றிட வேண்டும். மருத்துவப் படிப்பில் சேர +2 படிப்பில் இயற்பியல், வேதி யியல், உயிரியல் அல்லது இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். +2 தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் சேரலாம். மருத்துவப் படிப்பில் தேர்ச்சி பெற்றதும், தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்து விட்டு, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவராகப் பணியாற்றலாம். சுயமாகவும் மருத்துவமனை நடத்தலாம். மருத்துவத்தில் மேற்படிப்பு படிக்க விரும்பினால் எம்.டி., எம்.எஸ்., எம்.சி.எச்., போன்ற படிப்புகள் உள்ளன.

பல் மருத்துவம்

பற்களைச் சீரமைப்பது, செயற்கைப் பற்களைப் பொருத்துவது, வாய் மற்றும் பல் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுப்பது, பல் நோய்களைக் குணப்படுத்துவது போன்றவை பல் மருத்துவர்களின் பணியாகும். பி.டி.எஸ்., எனப்படும் பேச்சிலர் ஆஃப் டெண்டல் சர்ஜரி என்ற இளநிலைப் பட்டம் பெற்றவர் பல் மருத்துவராக முடியும்.

ஹோமியோபதி மருத்துவம்

ஹோமியோபதி மருத்துவர் ஆக வேண்டுமெனில் ஹோமியோபதி மெடிசின் அண்ட் சர்ஜரி (பி.எச்.எம்.எஸ்.) என்ற இளநிலைப் பட்டம் பெற வேண்டும். இம்மருத்துவ முறையில் நோயாளிகளின் மனநிலையையும், உணர்ச்சிகளையும் கருத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுவதால் ஹோமியோபதி மருத்துவம் படித்தவர் மருத்துவர் மட்டுமல்ல, உளவியல் நிபுணருமாவார் என்பது சிறப்பு. மேலும் ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம், சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா அறிவியல் போன்ற படிப்புகளுக்கும் மருத்துவத் துறையில் சிறப்பான வேலை வாய்ப்புகள் உள்ளன.

கணினி சித்திரக் கலை (அனிமேஷன்)

தகவல் தொழில் நுட்பத்துறையில் கணினி சித்திர வரைகலை படிப்பு மிகவும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. கலையும் அறிவியலும் சங்கமிக்கும் இத்துறை சார்ந்த படிப்புகள் இளைஞர்கள் மத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்று வருகின்றன. கம்ப்யூட்டர் அனிமேஷன் எனப்படும் கணினி சித்திர வரைவுகள் இன்று அனைத்துத் துறைகளிலும் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று ஏராளமான கல்வி நிறுவனங்களில் இப்படிப்பு சொல்லித் தரப்படுகிறது. இப்படிப்பை படித்தவர்களுக்குத் தொழிற்சாலைகள், ஆய்வுக் கூடங்கள், திரைப்படத் துறை, தொலைக்காட்சி, விளம்பர நிறுவனங்கள் போன்றவற்றில் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உள்ளன.

மேலும் நூலகம் மற்றும் தகவல் அறிவியல், இதழியல், புத்தக வெளியீடு, விளம்பரம், சுற்றுலா மற்றும் பயணம், மக்கள் தொடர்பு, விமான ஓட்டுனர் கல்வி, தகவல் தொழில் நுட்பம் சார்ந்த படிப்புகள், மானுடவியல், வானியல், பிளாஸ்டிக் மற்றும் தோல் தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகள், சுற்றுச்சூழல் கல்வி, வடிவமைப்புக் கல்வி, ஃபேஷன் தொழில் நுட்பம், மறுவாழ்வுப் படிப்புகள், சமூகப் பணி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி, மேலாண்மை சார்ந்த படிப்புகள் போன்றவைகளும் முக்கியத்துவம் வாய்ந்த படிப்புகளாகும்.

செவிலியர் (நர்சிங்) படிப்புகள்

செவிலியர் பணி என்பது மருத்துவத்துறையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். செவிலியர் பணி, மருத்துவத்துறை உதவியாளர் பணி குறித்த படிப்புகளும் ஏராள மாக உள்ளன. மன நிறைவு தருவதாலும், வேலை வாய்ப்பை எளிதில் பெற்றுத் தருவதாலும் நர்சிங் படிக்க விரும்புபவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. செவிலியர் ஆக வேண்டுமென்றால் பி.எஸ்.சி. (நர்சிங்) பட்டப் படிப்பு, டிப்ளமோ இன் நர்சிங், சர்டிபிகேட் இன் நர்சிங், ஜெனரல் நர்சிங் அண்ட் மிட்ஒய்ஃபரி, ஆண் செவிலியர் படிப்பு மற்றும் ஆக்சிலரி நர்சிங் அண்ட் மிட்வைஃபரி என்ற படிப்புகள் உள்ளன

மேலும் ஃபிசியோதெரபி, எமர்ஜென்ஸிகேர் டெக்னீஷியன், அனஸ்தீசியா டெக்னீஷியன், ஆர்த்தோபிடிக் டெக்னீஷியன்,

சட்டக் கல்வி

சட்டத்தின் முன்னர் அனைவரும் சமம் என்ற வாக்கிற்கு ஏற்ப, சட்டம் மற்றும் அது தொடர்பான கல்வியைக் கற்றுத் தரும் கல்விக் கூடங்களில் ஏராளமானவர்கள் பயின்று வருவது நம் நாட்டின் சட்டத்துறைக்குப் பெருமையாகும். தமிழகத்தில் டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, நெல்லை மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

கலை மற்றும் அறிவியல் படிப்புகள்

+2 படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் கலை, அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு ஆர்வத்துடன் முன்வர வேண்டும். கலைப் படிப்புகளில் தற்போது பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முன்பிருந்த பாடப் பிரிவுகளை மாற்றிவிட்டு, வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தரக்கூடிய புதிய பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் ஏராளமாகச் செயல்பட்டு வருகின்றன.

பொறியியல் கல்லூரிகளில் நடைபெறுவது போல, கலைக் கல்லூரிகளிலும் தொழில் நிறுவனங்களின் வளாகத் தேர்வு (கேம்பஸ் இண்டர்வியூ) நடத்தப்பட்டு, மாணவ – மாணவியர், படித்து முடித்தவுடனே பணி ஆணையைப் பெற்று விடுகின்றனர். எனவே வேலைவாய்ப்புத் தரும் பாடப் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து, நன்கு படித்து, நல்ல மதிப்பெண்களையும், உடனடி வேலைவாய்ப்பையும் பெறலாம்.

கலை மற்றும் அறிவியல் பாடத் திட்டங்களில் குறிப்பிட்ட சில பாடங்களைப் பயின்றால் எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் அப்படிப்புகளில் சேர மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர். அத்தகைய பாடத் திட்டங்கள் இன்று பெருவாரியான கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

இளங்கலை அறிவியல் காட்சித் தகவலியல்

மீடியா என்று அழைக்கப்படும் பத்திரிக்கைகள், சினிமா, தொலைக்காட்சி, விளம்பரம் ஆகிய அனைத்திற்குமான நுழைவு வாயில் விஸ்காம் எனப்படும் காட்சித் தகவலியல் படிப்பாகும். இதில் ஓவியம், புகைப்படக்கலை, குறும்படம், நாடகம், சினிமா, வீடியோ, தொலைக்காட்சி, விளம்பரம் ஆகியவற்றோடு இதழியல் குறித்த பாடமும் கற்றுத் தரப்படுகிறது. படிப்பின் இடையில் செயல் திட்டமும் உண்டு.

உயிர்த் தொழில் நுட்பம்

வருங்காலத்தில் உலகத்தை ஆளப்போவது உயிர்த் தொழில் நுட்பம் எனப்படும் பயோடெக்னாலஜி துறையாகும். தாவர மற்றும் விலங்கு செல்கள், கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியா, பூஞ்சைகள், ஈஸ்ட், வைரஸ் ஆகியவற்றைப் பயன்படுத்தி மக்களுக்குப் பயன்படும் புதிய பொருட்களை உருவாக்குவது இத்துறையாகும். மேலும் நுண்ணுயிரியல், உயிர்த் தகவலியல், உயிர் வேதியியல், புவியியல், ஜியாலஜி, மனையியல், உணவுத் தொழில் நுட்பம், ஊட்டச் சத்து மற்றும் உணவுக் கட்டுப்பாட்டுக் கல்வி, ஹோட்டல் மேலாண்மை, ஆடைகள் வடிவமைப்பு மற்றும் பால் பண்ணைத் தொழில் குறித்த படிப்புகள் இன்று பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

டிப்ளமோ இன் மெடிக்கல் லேப் டெக்னீஷியன், லேப் டெக்னீஷியன் மற்றும் டயாலிசிஸ் டெக்னீஷியன் போன்ற படிப்புகளும் வேலை வாய்ப்புகளை எளிதில் பெற்றுத் தரும் படிப்புகளாக உள்ளன.

மருந்தியல் படிப்பு

நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் தக்க மருந்துகளைத் தருவதற்கு மருந்தியல் படித்தவர்கள் வேண்டும். பி.பார்ம்., டி.பார்ம்., போன்ற மருந்தியல் படிப்புகளைப் படிப்பதன் மூலம் மருந்து விற்பனைப் பிரதிநிதிகள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், மருந்து ஆய்வகங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணி புரியலாம். மருத்துவம் சார்ந்த படிப்புகள் மட்டுமல்லாது மருத்துவத்துறைக்கு உதவியாகப் பல்வேறு பணிகளுக்கும் ஏற்ற படிப்புகள் அதிக அளவில் உள்ளன. அவைகளில் சேர்ந்து பயில்பவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. நோயாளிகளுக்குத் தரப்படும் மருந்துகள் குறித்தும், அவைகளின் தன்மை குறித்தும் அறிந்து கொள்வதற்குப் பல்வேறு படிப்புகள் உள்ளன. அவைகள் அதிக வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருபவையாக உள்ளன.

பொறியியல் படிப்புகள்

தற்போது பொறியியல் படித்தவர்களின் தேவை அதிகமாக உள்ளதால் பொறியியல் படிப்பு எளிதில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் படிப்பாக முதலிடத்தில் உள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் தமிழகம் முழுவதும் அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள் ஏராளமாக உள்ளன. இக்கல்லூரிகளில் ஏறத்தாழ 50 விதமான பொறியியல் படிப்புகளில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானவர்கள் படித்து பட்டம் பெறுகின்றனர். கணிப்பொறி அறிவியல், மின்னணுவியல், மின்னியல், தகவல் தொழில்நுட்பம், கட்டிடவியல், உலோகவியல் மற்றும் மெக்கானிக்கல் ஆகிய பிரிவுகளில் உள்ள பொறியியல் படிப்புகள் மிகவும் முக்கியமானவை ஆகும்.

பாலிடெக்னிக் படிப்புகள்

பாலிடெக்னிக் எனப்படும் பல்தொழில்நுட்பக் கல்வி, மூன்றாண்டு டிப்ளமோ படிப்பாகும். பாலிடெக்னிக் படிப்பை முடித்தவர்கள், பொறியியல் படிப்பில் இரண்டாம் ஆண்டிலிருந்து சேர்ந்து படிக்கலாம். இப்படிப்பினை படிப்பவர்களுக்கும் வேலைவாய்ப்பு எளிதில் கிடைப்பதால் இதுவும் சிறந்த படிப்பாகும்.

தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள்

வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப, சிறந்த நிபுணர்களை உருவாக்கும் வகையில் தரமான தொழிற்பயிற்சிகளை வழங்கும் கல்வி நிறுவனங்கள் இன்று நம் மாநிலத்தில் அதிகம் உள்ளன. நமது நாட்டில் தலைசிறந்து விளங்குபவை ஐ.ஐ.டி. எனப்படும் இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களே. இங்கு படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்து விட்டால், எதிர்காலம் குறித்த கவலை

எதுவும் தேவையில்லை. படிப்பை முடிக்கும் முன்பே வளாக நேர்முகத் தேர்வு மூலம் அதிக சம்பளத்தில் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தியாவில் மும்பை, கோரக்பூர், புதுதில்லி, சென்னை, கௌகாத்தி, ரூர்க்கி மற்றும் கான்பூர் ஆகிய இடங்களில் ஐ.ஐ.டி. நிறுவனங்கள் உள்ளன.

வேளாண்மைக் கல்வி

நம் நாட்டில் வேளாண்மை மிக முக்கியத் தொழிலாக உள்ளது. அதிக பரப்பளவில் வேளாண்மை நடைபெறுகிறது. வேளாண்மையில் நவீன உத்திகளைப் புகுத்தும் வகையில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயத் துறையில் பயன்படுத்தப்படும் கருவிகளிலும் பல்வேறு புதுமைகள் புகுத்தப்பட்டு, விவசாயப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பல்வேறு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் வேளாண்மை குறித்த படிப்புகள், வேளாண்மைக் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இளங்கலை அறிவியல் (வேளாண்மை) என்ற படிப்பு வேளாண்மை குறித்த படிப்புகளில் முக்கியமானது.

பி.டெக். (வேளாண்மைப் பொறியியல்)

இயற்கை வளங்களை திறமையாகப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியைப் பெருக்கிட, பொறியியல் அறிவை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்த இப்படிப்பை முடித்தவர்களுக்கு வேளாண்மைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள், பண்ணை இயந்திரங்கள் செய்யும் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.

கணிப்பொறி அறிவியல்

+2 படிப்பில் கணினி அறிவியல் படிப்பவர்கள் மேற்படிப்பிற்குத் தேர்ந்தெடுப்பது இளங்கலை கணிப்பொறி அறிவியல் படிப்பாகும். இதில் கணினியில் பயன்படுத்தப்படும் மென்பொருள் மற்றும் வன்பொருள் ஆகியவற்றின் அடிப்படை விவரங்கள் கற்றுத் தரப்படுகின்றன. இப்படிப்பை முடிப்பவர்கள் மேற்கொண்டு எம்.எஸ்.சி., எம்.சி.ஏ., முதுகலை டிப்ளமோ உள்ளிட்ட கணினி சார்ந்த படிப்புகளை படிக்கலாம்.

கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் (பி.சி.ஏ.,)

தற்போது இத்துறைப் படிப்பு பிரபலமாகி வருகிறது. தனியார் துறை மற்றும் கணிப்பொறி சார்ந்த அனைத்து நிறுவனங்களிலும் இப்படிப்பு படித்தவர்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளன. எம்.சி.ஏ. போன்ற மேற்படிப்பையும் படிக்கலாம்.

கால்நடை மருத்துவ அறிவியல்

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்கவும், கலப்பினக் கால்நடைகளை உருவாக்கவும், கால்நடை மருத்துவ அறிவியல் கல்வி அவசியமாகிறது. தமிழகத்தில் சென்னை மற்றும் நாமக்கல்லில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகள், தூத்துக்குடியில் அமைந்துள்ள மீன்வளக் கல்லூரி போன்றவைகளில் கால்நடை மருத்துவப் படிப்பு உள்ளது.

கடல் சார்ந்த கல்வி

மூன்று புறமும் அலைகடல் கொண்ட நம்நாட்டில் கடல் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி அதிகரித்த வண்ணம் உள்ளன. அவைகளுக்கு ஏற்ற கல்வியினைக் கற்றுத் தரும் கல்லூரிகளும் ஏராளமாக உள்ளன. கடலியல், கப்பல் பணி, கப்பல் பொறியியல் போன்ற படிப்புகளைப் பரங்கிப்பேட்டையில் உள்ள கடல் வாழ் உயிரின மேனிலை ஆராய்ச்சி மையம் மற்றும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்றவற்றில் படிக்கலாம்.

பி.டெக். (வேளாண்மை உயர் தொழில் நுட்பம்)

அண்மைக் காலமாகப் பிரபலமடைந்து வரும் வேளாண்மைப் படிப்பு இதுவாகும். அறிவியலில் ஏற்பட்டுள்ள மாபெரும் முன்னேற்றங்களைக் கொண்டுஉயர்தொழில்நுட்பத்தைவிவசாயமேம்பாட்டுக்குப்பயன்படுத்துவது குறித்த படிப்பு என்பதால் இப்படிப்பை மேற் கொள்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏராளமாக உள்ளன.

பி.எஸ்.சி., (உணவு பதப்படுத்தும் அறிவியல்)

சுவையும், சுகாதாரமும் மிகுந்த உணவுப் பொருட்களைத் தயாரித்தல், பதப்படுத்துதல் ஆகியவை உணவுப் பதப்படுத்தல் குறித்த படிப்புகளில் கற்றுத் தரப்படுகின்றன. இப்படிப்புகளை அளிக்கும் கல்வி நிறுவனங்கள் நம் நாட்டில் ஏராளமாக உள்ளன. அறிவியல் தொழில் நுட்பங்களின் உதவியுடன் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தும் முறை குறித்த படிப்பு இதுவாகும்.

மேலும் பல்வேறு வகையான படிப்புகளை வழங்கும் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் நமது மாநிலத்தில் அதிகளவில் உள்ளன. அவைகளில் சேர்ந்து பயில்வதற்காக நாட்டின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் அயல்நாடுகளில் இருந்தும் ஏராளமானவர்கள் வருகின்றனர்.

தற்போது அனைத்து துறைகளிலும் வளர்ச்சியும் எதிர்காலமும் உள்ளது. எனவே கல்வியில் உயர்வு தாழ்வு கருதாமல், அனைத்துக் கல்வியையும் சமமாக நினைத்து மாணவர்கள் பயின்றிட முன்வர வேண்டும். கல்வி மட்டுமே எதிர்காலத்தை வளமானதாக்கும் எனவே மாணவர்களே கல்வி கற்றிடுங்கள். வாழ்வில் வெற்றி பெற்றிடுங்கள். ■

சமுதாய

வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

வங்கிகளில் பல தரப்பட்ட சேமிப்புக் கணக்குகள், வைப்பு தொகைகள், கடன் திட்டங்கள், பணம் அனுப்புதல் மற்றும் பெறுதல் போன்ற சேவைகள் உள்ளன. கிராமப்புற மக்களில் பெரும்பான்மை மக்களுக்கு வங்கிகளின் மூலம் பெறக்கூடிய அனைத்து சேவைகளும் தெரியாததால், வங்கி சேவைகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வங்கிகளில் கணக்குத் துவங்கி, கடன் பெற்று செயல்பட்டு வருகின்றன. அவைகளில் பல குழுக்கள் வங்கிச் சேவை சட்ட திட்டங்களை முழுமையாக அறியாததினால் திறம்பட செயல்படுவதில்லை. வங்கியின் சட்ட திட்டங்கள் நன்கு அறிந்த, சேவை மனப்பான்மையுடன் உள்ள ஒரு மகளிர் மூலம் உதவிட தமிழ்நாடு மாநில மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைசிறந்த திட்டம்தான், ‘சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் திட்டம்’ (Community Bank Co-ordinators)

ஊரகப் பகுதிகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழு அமைப்பில் (அ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர்களுள், சமுதாய வளர்ச்சி மற்றும் வங்கித் தொடர்பான பணியில் ஆர்வமுள்ள, அனைவருக்கும் வங்கி சேவை, கடன் பெற உதவியான இருத்தல், தொடர் கண்காணித்தல் மற்றும் காப்பீடு சேவைகளை அனைவரும் பயன் பெறும் வகையில் வழிகாட்டியாக பணிபுரிவோரே ‘சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்’ ஆவார்.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் மக்கள் கூட்டமைப்புகளுக்கும் வங்கி தொடர்பான சேவைகள் நண்பராகவும், சமுதாயத்தின் வழிகாட்டியாகவும் செயல்படுவது சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களின் முக்கிய பணியாகும்.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களின் செயல்பாடுகள்

1. வங்கிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலமாக, நண்பராக செயல்படுதல்
2. குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், தனிநபருக்குத்தேவையானகடன்களைப்பெறகடன் திட்டங்கள் தயாரிப்பதிலும், வங்கிகளிடமிருந்து அவர்கள் கடன் பெறவும் உதவிடுதல்
3. சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து நிதி மேலாண்மையை மேம்படுத்திடுதல்
4. சுய உதவிக் குழுக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குத் துணை புரிந்திடுதல்
5. குழுக்கள் வங்கி நிதிச் சேவைகளைப் பெறும் வழிமுறைகள், நிதியினை முறையாகப் பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு வழிகாட்டிடுதல்
6. சுய உதவிக் குழுக்களின் கடன் திருப்பி செலுத்துதலை கண்காணிக்கவும், உரிய காலத்தில் தர மதிப்பீடு செய்தல், கடன்திட்டம் தயாரித்தல், வங்கிகளில் ஆவணப்படுத்துதல் போன்றவைகளில் ஏற்படும் கால தாமதத்தினை தவிர்க்க சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் உரிய நேரத்தில் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கிடுதல்

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களின் தகுதிகள்

1. மகளிர் சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராகவும் அந்த பகுதி (அ) தொகுப்பைச் சேர்ந்தவராக இருத்தல் அவசியம்
2. குறைந்தது 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அனுபவம் வாய்ந்த நபர் எனில் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தாலும் தேர்வு செய்யலாம்
3. 38 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
4. சமூக அக்கறையுடனும், குழுவாக இணைந்து செயல்படக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று சேவை புரியவும், பேச்சுத் திறன் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்
6. கணினி இயக்குதல் மற்றும் குறுந்தகவல் (SMS) அனுப்புபவராகவும், வாசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்
7. குழுக்களின் சேமிப்பு மற்றும் கடன் விவரங்களை வெளிநபர்களுக்கு தெரிவிக்காமல் ரகசியம் காப்ப வராகவும் இருத்தல் வேண்டும். ■

(தொடரும்)

விழுப்புரம்

இயக்க செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 07.05.2015 அன்று விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்தில் உள்ள ஊரணித்தாங்கல் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகள், திறன் வளர்ப்பு செயல்பாடுகள், தனி நபர் கழிப்பிடம், சுய உதவிக் குழுக்கள் வங்கிக் கடன் இணைப்பு, ஒத்தத் தொழில் குழுவின் செயல்பாடுகள் ஆகியவை குறித்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்களுடன் கலந்தரையாடல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்க சிறப்பு நிதியிலிருந்து தனி நபர் கடன் பெற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் மேற்கொண்டுள்ள தொழில்கள் குறித்து விவாதித்ததுடன், பதிவேடுகளை ஆய்வு செய்த முதன்மை செயல் அலுவலர் அவர்கள் மேலும் சிறப்புடன் செயல்பட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். இந்த ஆய்வின் போது விழுப்புரம் மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' இதழ் விளங்கி வருவதை அனைவரும் அறிவர். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 150/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 300/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 450/–

விளம்பரக் கட்டணங்கள் விபரம்

அட்டையில்	ரூ. 45,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 37,500/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 30,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 30,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 30,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' என்ற பெயரில் வங்கி வரைவேலையாக எடுத்து அனுப்பவும்.

வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்பவும்.

மருத்துவ குணங்கள் நிறைந்த மாதுளை

வருடத்தின் அனைத்து நாட்களும் கிடைக்கும் மாதுளம் பழத்தில் மருத்துவ குணங்கள் அதிக அளவில் உள்ளன. மாதுளம் பழச்சாற்றில் தேன் கலந்து காலை ஆகாரத்துக்குப் பின் தினமும் சாப்பிட்டால், ஒரு மாத உபயோகத்தில் உடல் ஆரோக்கியமும் தெம்பும் உண்டாகும். புதிய ரத்தம் உற்பத்தியாகி விடும்.

மாதுளம்பூக்களை மருந்தாகப் பயன்படுத்தும் போது, இரத்த வாந்தி, இரத்த மூலம் வயிற்றுக் கடுப்பு, உடல் சூடு தணியும். இரத்தம் சுத்தமாகும், இரத்த விருத்தி உண்டாகும்.

மாதுளம் பூக்களை உலர்த்திப் பொடித்து வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு சிட்டிகை வீதம் சாப்பிட்டால், இருமல் நிற்கும்.

மூக்கில் இரத்தம் வடியும் நோய் உள்ளவர்கள், மாதுளம் பூச்சாறு, அருகம்புல் சாறு சமமாகச் சேர்த்து வேளைக்கு 30 மில்லி வீதம் தினசரி மூன்று வேளையாக மூன்று தினங்களுக்குக் கொடுத்தால், இரத்தம் கொட்டுதல் நின்று விடும்.

'பெண்களுக்கு ஏற்படும் உதிரப் போக்கிற்கு இதே மருந்தை மூன்று தினங்களுக்குக் கொடுத்தால் உதிரப்போக்கு நிவர்த்தியாகும். மாதுளம் பூச்சாற்றை 15 மில்லியளவு சேகரித்து சிறிது கற்கண்டு சேர்த்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், இரத்த மூலம் நீங்கும். மூலக் கடுப்பும், உடல் சூடும் தணியும். வாந்தி, மயக்கத்திற்குக் கொடுத்தால் நோய் தீரும்.

மாதுளம் பழத்தின் தோலை உலர்த்தித் தூள் செய்து காலை, மாலை என 15 மில்லி அளவில் சாப்பிட்டு வந்தால் வயிற்றுவலி, குடல் இரைச்சல், வயிற்றுப் பொருமல் தீரும்.

மாதுளம் மரப்பட்டை அல்லது வேர்ப்பட்டையை வெட்டி பச்சையாக இருக்கும்போதே இதன் எடைக்கு எட்டு மடங்கு தண்ணீர் சேர்த்து பாதியாகச் சுண்டக் காய்ச்சியதை, காலை நேரத்தில் 30 மில்லியளவு சாப்பிட்டு வந்தால் வயிற்றில் உள்ள தட்டைப் புச்சிகள் மலத்துடன் வெளியேறி விடும்.

மாதுளம் பழத்தில் இனிப்பு, புளிப்பு என இரண்டு வகைகள் உள்ளன. இரும்பு, சர்க்கரை, பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்கள் இந்தப் பழத்தில் நிறைய உள்ளன. உடலுக்கு தீங்கு செய்யும் கிருமிகளை அழிக்கும் ஆற்றலும், நினைவாற்றலை பெருகச் செய்யும் சக்தியும் இந்தப் பழத்திற்கு உண்டு. ரத்தத்தில் ஹுமோகுளோபின் அளவை அதிகரிப்பதுடன், இதயத்திற்கும் நன்மை அளிக்கும் பழமாக மாதுளை திகழ்கிறது. ■

பாரம்பரிய பானம்

செம்பருத்தி ஜூஸ்

தேவையான பொருட்கள்

செம்பருத்திப் பூ – 10, எலுமிச்சம் பழம் – 3, சர்க்கரை – 5 தேக்கரண்டி, தண்ணீர் – 5 டம்ளர்

செய்முறை

தண்ணீரை அடுப்பில் வைத்து கொதிக்க விடவும். கொதித்தவுடன் செம்பருத்தி இதழ்களை மூழ்கும்படி அதில் போட்டு மூடிவிட்டு, அடுப்பை அணைத்து விடவும். அதன் சாறு முழுவதும் இறங்கி தண்ணீர் ரோஸ் கலரில் மாறியவுடன் பூவின் இதழ்களும் வெளிர் நிறத்தில் மாறி விடும். அதை வடிகட்டி எடுத்து, சர்க்கரையை அதனுடன் கரைத்து குளிர்சாதனப் பெட்டியில் சுமார் ஒரு மணி நேரம் வைக்கவும். பிறகு அதில் எலுமிச்சைப் பழங்களை பிழிந்து விட்டு தேவைப்பட்டால் ஐஸ்கட்டி சேர்த்து பரிமாறலாம். இது வெயிலுக்கேற்ற குளிர்ச்சி தரக் கூடிய சுவையான பாரம்பரிய பானம். ■

சீரகத்தை நன்கு வறுத்து ஒரு டம்ளர் நீர் ஊற்றி கொதிக்க வைத்து, வடிகட்டி ஒரு தேக்கரண்டி தேன் கலந்து கொடுத்தால், இளம் பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் வயிற்று வலி குறையும்

சர்க்கரைக்கு பதில்

ஸ்வீட்டெக்ஸ்...

கேள்வி

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் சர்க்கரைக்கு பதில் ஸ்வீட்டெக்ஸ் சேர்த்துக் கொள்ளலாமா? ஸ்வீட்டெக்ஸும் சுக்ரோஸும் ஒன்றா? ஸ்வீட்டெக்ஸ் சாப்பிட்டால் கேன்சர் வரும் என்கிறார்களே அது உண்மையா?

பதில்

ஸ்வீட்டெக்ஸும், சுக்ரோஸும் ஒன்றல்ல. சுக்ரோஸ் என்பது ஒரு வகை சர்க்கரைதான். நாம் வீட்டில் பயன்படுத்தும் சர்க்கரை, பழங்களில் சுக்ரோஸ் உள்ளது. சுக்ரோஸ் உடலுக்குள் சென்று க்ளுக்கோஸாக மாறி விடுகிறது. சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு க்ளுக்கோஸ் அதிகமாகும் போது சர்க்கரை நோய் தீவிரமாகும். எனவே சுக்ரோஸை தவிர்த்து, ஸ்வீட்டெக்ஸ் சாப்பிடலாம். அதில் க்ளுக்கோஸ் கிடையாது. அது ஒரு ரசாயனப் பொருள் ஸ்வீட்டெக்ஸ் சாப்பிட்டால் கேன்சர் வரும் என்பது தவறான கருத்து. அப்படி இல்லை என்று மருத்துவ ரீதியாக நிரூபித்து விட்டார்கள்.

அமீபியாஸிஸ் தொல்லை தீருமா?

கேள்வி

அடிக்கடி வெளியூர் செல்லும் பணியில் உள்ளதால், ஓட்டல்களில் சாப்பிடுகிறேன். இதனால் அமீபியாஸிஸ் தொல்லை ஏற்படுகிறது. இதற்கு தீர்வு என்ன?

பதில்

எண்ணெயில் பொரித்த கார உணவுகள், கிழங்கு வகைகளை சாப்பிடக் கூடாது. வீட்டில் இருக்கும் நாட்களில் அன்னப்பொடி செய்து சாப்பிடுங்கள். சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், பெருஞ்சீரகம், பெருங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றை சம அளவு போட்டு வாணலியில் வறுத்து அரைத்த அன்னபொடியுடன் சுண்டைக்காய் வற்றல், கறி வேப்பிலை இரண்டையும் சம அளவி எடுத்துப் பொடி செய்து தினசரி காலையும், மாலையும் ஒரு சிட்டிகை சாப்பிடவும். ■

பெண்களின் உடல் நலத்தைக் காக்கும் உணவுகள்

பெண்கள் உடல் நலம் காக்க

உடல் ஆரோக்கியத்திற்கான பணிகளை மட்டும் உணவுப் பொருட்கள் செய்வதில்லை. மேனி எழிலைப் பாதுகாக்கும் பணியையும் அவைகள் செய்கின்றன. நமது சமையல் அறையில் அன்றாடம் சமைக்கப் பயன்படுத்தும் பொருட்களே அழகு சாதனப் பொருட்களாக பயன்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

தேங்காய் எண்ணெய்

உணவு சமைக்க மட்டுமல்லாமல் மிகச் சிறந்த அழகுப் பொருளாகவும் தேங்காய் எண்ணெய் செயல்படுகிறது. பிரசவ கால தழும்புகளை போக்கவும், பித்த வெடிப்புகளை நீக்கும் மிகச் சிறந்த மருந்துப் பொருளாகவும் இது பயன்படுகிறது.

உப்பு – சர்க்கரை

சமையலுக்கு பயன்படும் பொருட்களில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ள உப்பும் சர்க்கரையும், கை கால்களில் இறந்த செல்களை நீக்கப் பயன்படும் பொருளாகவும் பயன்படுகின்றன.

ப்ளீச் பவுடர்

முகத்தில் சிலருக்கு ஆங்காங்கே கருப்பான திட்டுகளும், கண்ணுக்கு கீழே அடர்த்தியான கருவளையங்களும் தோன்றும். இவைகளைப் போக்கி, முகத்தை பளிச்சென மாற்றும் பொருள் பாசிப் பருப்பு மாவு. கசகசா, பாதாம், பிஸ்தா, துளசி, ரோஜா மொட்டு ஆகியவற்றை நன்கு காயவைத்து பாசிப்பருப்பு மாவுடன் சேர்த்து நன்கு பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பவுடரை சிறிது எடுத்து தினமும் பாலுடன் சேர்த்து குழைத்து முகத்தில் பூசி, 15 நிமிடங்களுக்குப் பிறகு முகத்தைக் கழுவினால் நாளடைவில் முகத்தில் உள்ள கருமை நீங்கி முகம் பளபளப்பாகும்.

> கோடை காலத்தில் வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்து வந்தால், சருமம் வறட்சியடையாது.

பேஷியல் பழக்கூழ்

கொட்டை நீக்கிய பேரீச்சம் பழம், உலர்ந்த திராட்சைப் பழம் ஆகியவற்றை ஒருநாள் முழுவதும் வென்னீரில் ஊற வைக்க வேண்டும். பின்னர் இரண்டையும் சேர்த்து அரைத்து இதனுடன் அரை தேக்கரண்டி பப்பாளி பழக்கூழையும் கலந்து, முகத்தில் பேக் போல போட்டு 20 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவ வேண்டும். வெயில்பட்டு கறுத்த போன முகம் இந்த பேஸ் பேக் போடுவதால் பொலிவடையும்.

செண்பகப் பூ

செண்பகப் பூவை நிழலில் உலர்த்தி பொடி செய்து, அதனுடன் தேன் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால், உடல் பலம் பெறும். செண்பகப்பூவை கசாயம் செய்து அதனுடன் பனங்கற்கண்டு கலந்து அருந்தி வந்தால் நரம்புத் தளர்ச்சி நீங்கும். ■

இயற்கைப் பொருட்களால் கிடைக்கும் நன்மைகள்!

கேரட்

புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் கேரட் முக்கிய பங்காற்றுகிறது. இதில் உள்ள கரோட்டின் என்னும் சத்தானது, புற்றுநோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது. பெண்களுக்கு மெனோபாஸ் காலங்களின் ஏற்படும் தாதுக்கள், கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் இழப்பை காரட் தடுக்கும். பெண்களுக்கு மாத விலக்கின்போது உண்டாகும் அதிக உதிரப் போக்கை கட்டுப்படுத்தும் தன்மை நிறைந்தது. ■

முருங்கைக் கீரை

கழுத்து வலி உள்ளவர்கள் தினந்தோறும் முருங்கைக் கீரையை உணவுடன் சேர்த்து சாப்பிடலாம். இந்தக் கீரையுடன் வசம்பு, உப்பு சேர்த்து சுட்டு கரியாக்கி, அதை நீரில் குழைத்து தொப்புளைச் சுற்றி பற்று போட்டால் குழந்தைகளின் வயிற்று உப்புசம், வயிற்று வலி தீரும். இளசாகவும் உள்ள முருங்கை காய்களை எடுத்து, இடித்து சாறு பிழிந்து, சம அளவு தேன் கலந்து சாப்பிட ஜலதோஷம் குணமாகும். ■


மங்கை
சிலநாட்களாக எப்போதும் ஏதோ சிந்தனையிலிருந்தாள் மங்கை.
ஒரே மூஞ்சத் தூக்கி வச்சிட்டு இருக்கியே.. என்ன செய்துன்னு சொல்லேன்
உன் வேலையப் பாரு! சரியா...
என்ன பிரச்சினை இவளுக்கு...ஏதும் பயந்த கோளாறா இருக்குமோ..
பக்கத்து வீட்டு பேச்சியிடம் யோசனை கேட்டாள் மங்கை அம்மா.
காத்துக்கருப்பு எல்லாம் புடிச்சிருக்காதுக்கா..
அதுதான் சரி
முதல்ல ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போங்க..
மறுநாளே மங்கையை மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றாள் அம்மா.
அரசு மருத்துவமனை


மருத்துவமனையில்
நல்லா பேசிச்சிரிச்சி மூனு நாளாகுதும்மா...
என்ன பிரச்சினை உடம்புக்கு.. நீங்க கொஞ்சம் வெளியில இருங்க
அதன்பின் மங்கையிடம் தனியே பேசுகிறார் டாக்டர்
ரொம்ப அவமானமா இருக்கு டாக்டர்.. தினமும் காலையில் கொல்லைப்புறம் போகும்போது..
தான் தோட்டத்துக்கு மலம் கழிக்கப் போகும்போது சில இளைஞர்களின் அருவருப்பான கேலி கிண்டலுக்கு ஆளாவதைச் சொல்லி அழுகிறாள் மங்கை.
டாக்டருக்கு விசயம் புரிந்தது.
சரி அழாதே
உங்களுக்குன்னு சின்னதா ஒரு கழிப்பறை வீட்டுல இருக்கணும்கிறதைப் புரிஞ்சிக்கங்க.
பின் மங்கையின் தாயை அழைத்து விசயத்தை விளக்குகுறார்.
வெரி குட்!
புரிஞ்சது டாக்டர். நிச்சயமா எங்கவீட்டுல ஒரு கழிப்பறை கட்ட உடனே ஏற்பாடு செய்வேன். இதை மத்த எல்லாருக்கும் எடுத்துச் சொல்வேன்.
அதன்பின், மங்கைக்கு மட்டுமல்ல வேறு எந்த மங்கைக்கும் அப்படிப் பிரச்சினை வராமல் பார்த்துக்கொண்டனர் அந்தக் கிராம மக்கள்.

நம் மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம்

இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 07.05.2005 அன்று வருகை தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகள ஆய்வு செய்தார். ஆய்விற்குப் பின்னர் கண்ணமங்கலத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்று வரும் இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சியினை பார்வையிட்டு ஆய்வு செய்ய அப்பகுதியில் உள்ள தனியார் கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனத்திற்கு வருகை தந்த முதன்மை செயல் அலுவலர் அவர்கள், அந்த மையத்தில் பயிற்சி பெறும் மாணவ மாணவிகளிடம் பயிற்சி தொடர்பான விபரங்களைக் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது திருவண்ணாமலை மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். தனபதி, உதவித் திட்ட அலவலர்கள் திரு. ஜான்சன், திரு. மோகன்ராஜ், திரு. சசிக்குமார், கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் திருமதி. ரேவதி, நிர்வாகி திரு. கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ■

மாநில இயக்க மேலாண்மை இயக்க அலுவலர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாநில இயக்க மேலாண்மை அலுவலர்களுக்கான புத்தறிவு பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்களுக்கு, இயக்க செயல்பாடுகள் குறித்து ஒருநாள் புத்தறிவுப் பயிற்சி 12.05.2015 அன்று சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூடுதல் முதன்மை செயல் அலுவலர்கள் திரு. டி. ஆர். வேதநாயகம் மற்றும் திருமதி. மாதவி ஆகியோர் வாழ்வாதார இயக்கம் மற்றும் அதன் நோக்கங்கள் குறித்து உரையாற்றினர். திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீ பாரதி பயிற்சி அளித்தார். இந்தப் பயிற்சியில் இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், திறன் மற்றும் பணியமர்த்துதல், ஆவணங்கள் பராமரித்தல் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது. ■

ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் பார்வையிடல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் இயக்குநர் திருமதி. மாதவி அவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 24.04.2015 மற்றும் 25.04.2015 ஆகிய தேதிகளில் வருகை தந்து, ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகளை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியின் போது, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்தத் தொழில் குழு, தனி நபர் தொழில் நடவடிக்கைகள், கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்ட கூடுதல் செயல் இயக்குநர் அவர்கள், மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளையும் வழங்கினார். இந்த ஆய்வின்போது மாவட்ட திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். தனபதி, உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர். ■

ஈரோடு

வன்கொடுமைக்கு எதிராகப் போராடிய மகளிர் சுய உதவிக் குழுவுக்குப் பரிசு

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை எதிர்த்துப் போராடும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படுகின்றது. அதன்படி கடந்த 2012–13ஆம் ஆண்டிற்கான விருதினை பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈரோடு மாவட்டம், அந்தியூர் தாலுக்கா, குப்பாண்டம்பாளையத்தில் செயல்படும் அன்னை தெரஸா மகளிர் சுய உதவிக் குழுவிற்கு, 04.05.2015 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் நிகழ்ச்சியின்போது, மாவட்ட ஆட்சியர் திரு. எஸ். பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் விருது மற்றும் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. பெ. ரேணுகாதேவி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திருச்சிராப்பள்ளி

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, ஊரகப் பகுதியைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. அதனடிப் படையில், 28.04.2015 அன்று மணப்பாறை லிட்டில் பிளவர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமின் மூலம் பணி வாய்ப்பு பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார். ■

வேலூர்

கூடுதல் செயல் அலுவலர் அவர்களின் ஆய்வு

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை கூடுதல் செயல் இயக்குநர் திருமதி. மாதவி அவர்கள், 28.04.2015 அன்று ஆய்வு செய்தார். மேலப்புலம் ராஜீவ்காந்தி மக்கள் நல அறக்கட்டளை நிறுவனத்தில் நடைபெற்று வரும் திறன் பயிற்சி, நெமிலி ஒன்றியம், நெடும்புலி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகள், ராணிப்பேட்டை ஆறுதல் பவுண்டேஷன் சார்பில் நடைபெற்று வரும் ஷூ அப்பர் கிளிக்கிங் மற்றும் ஷூ அப்பர் குளோசிங் பயிற்சி, ரத்தினகிரி ரூரல் சோர்ஸ் நிறுவனத்தில் நடைபெற்று வரும் பி.பி.ஓ. பயிற்சி, வேலூர் எவ்ரான் தொழில் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு நிறுவனம், சத்துவாச்சேரி ஆஸ்கார் உணவக மேலாண்மை பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள் ஆகியவற்றினைப் பார்வையிட்டு ஆய்வு செய்த கூடுதல் இயக்குநர் அவர்கள் , பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார். ஆய்விற்குப் பின்னர் மாவட்ட திட்ட இயக்குநர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர் திருமதி. லோகநாயகி மற்றும் உதவித் திட்ட இயக்குநர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்குதல்

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்திய மதிப்பீட்டு முகாமில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட, 96 மாற்றுத் திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் உதவி உபகரணங்களை வழங்கினார். மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு. ஜெயசீலி, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவர்கள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கிராமப்புறங்களில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் கண்டறியப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்படுகின்றன.



மனிதனுக்கு கிடைத்த ஆயுள்

எல்லா உயிரினங்களுக்கும் வாழ்நாளை எவ்வளவு காலம் வைக்கலாம் என்று சிந்தித்தார் கடவுள் தன் இருப்பிடத்திற்கு எல்லா உயிரினங்களையும் வரச் செய்தார். அவற்றைப் பார்த்து உங்கள் ஒவ்வொருவருக்கும் முப்பது ஆண்டுகள் ஆயுள் தருகிறேன். இந்த வாழ்நாள் போதும் என்பவர்கள் இங்கிருந்து சென்று விடலாம். குறை உடையவர்கள் இங்கேயே இருங்கள். தீர விசாரித்து அவர்கள் குறையைத் தீர்த்து வைக்கிறேன் என்றார் கடவுள்.

கழுதை, நாய், குரங்கு, மனிதன் ஆகிய நான்கு உயிரினங்கள் மட்டுமே அங்கிருந்தன. மற்ற அனைத்து உயிரினங்களும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டு சென்று விட்டன.

முதலாவதாக நின்றிருந்த கழுதையை அழைத்த கடவுள், உன் குறை என்ன? என்று கேட்டார். உடனே கழுதை, ‘கடவுளே நான் நாள்தோறும் ஏராளமான சுமைகளைச் சுமந்து துன்பப்படுகிறேன். ஓய்வோ தூக்கமோ எனக்கு கிடைப்பது இல்லை. முதுகில் சுமையுடன் வரும் என்னை அடித்து துன்புறுத்துகிறார்கள். எனது வாழ்நாளை குறைத்து விடுங்கள்’ என்று கெஞ்சியது. கடவுளும், ‘சரி உனது வாழ்நாளில் 12 ஆண்டுகள் குறைத்து விடுகிறேன். இனி உனக்கு 18 ஆண்டுகள்தான் வாழ்நாள்’ என்றார். கழுதையும் மகிழ்ச்சியுடன் சென்றது.

அடுத்ததாக நாயை அழைத்த கடவுள், ‘உனக்கு என்ன குறை?’ என்று கேட்டார். உடனே நாய் கடவுளைப் பார்த்து, ‘கடவுளே, நான் வலிமையுடன் நன்றாக மோப்பம் பிடிக்கும் திறமையுடன் இருக்க வேண்டும். அப்போதுதான் எனக்கு மதிப்பு. நான் முதுமையடைந்து விட்டால் எல்லோரும் என்னை வெறுப்பார்கள். எனவே எனது வாழ்நாளையும் குறைத்து விடுங்கள்’ என்றது. உடனே கடவுள் ‘உனது வாழ்நாளை பன்னிரண்டு ஆண்டுகளாகக் குறைத்து விடுகிறேன்’ என்றார் கடவுள். மகிழ்ச்சியடைந்த நாயும் கடவுளை வணங்கி விட்டு சென்றது.

மூன்றாவதாக நின்றிருந்த குரங்கை அழைத்த கடவுள், ‘என்ன குறை உனக்கு?’ என்றார். உடனே குரங்கு, “கடவுளே, உணவுக்காக நாங்கள் மரத்திற்கு மரம் தாவுகிறோம், குதிக்கிறோம். முதுமை அடைந்து விட்டால் அது முடியாது. எனவே எங்களது ஆயுளையும் குறையுங்கள்’ என்றது. கடவுளும், ‘பத்து ஆண்டுகள் மட்டுமே உனது வாழ்நாள்’ என்றார். இதைக் கேட்ட குரங்கு கடவுளுக்கு நன்றி சொல்லி விட்டு போனது.

கடைசியாக நின்றிருந்த மனிதனைப் பார்த்த கடவுள், ‘உன்னுடைய குறையைச் சொல், உனக்கு எவ்வளவு ஆயுளைக் குறைக்க வேண்டும்?’ என்றார்.

கடவுளைப் பார்த்த மனிதன், ‘கடவுளே, முப்பது ஆண்டுகள் எங்களுக்கு மிகக் குறைந்த ஆயுள் ஆகும். முப்பது ஆண்டுகளுக்குள் ஏதேனும் ஒரு கலையைக் கற்றிருப்போம். படிப்பை முடித்திருப்போம். வீட்டை கட்டியிருப்போம். எல்லாக் கடமைகளையும் முடித்து விட்டு மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும் காலம் அது. நாங்கள் இதுவரை உழைத்த உழைப்பிற்குப் பயன் நுகரும் பருவம் அது. இந்தச் சூழலில் எங்கள் ஆயுள் முடிவது என்பது எங்களுக்குப் போதவே போதாது. எங்களுக்கு அதிக ஆயுள் வேண்டும்’ என்று கேட்டான்.

உடனே கடவுள் மனிதனைப் பார்த்து, ‘இங்கு வந்த நீ குறையுடன் செல்லக் கூடாது. கழுதையிடம் பெற்ற பன்னிரெண்டு ஆண்டுகள், நாயிடம் பெற்ற பதினெட்டு ஆண்டுகள், குரங்கிடம் பெற்ற இருபது ஆண்டுடுகள் என ஐம்பது ஆண்டுகள் சேர்த்து உனது ஆயுளை எண்பது ஆண்டுகளாக நீட்டித்துத் தருகிறேன். மகிழ்ச்சி தானே?’ என்றார். ‘மிக்க மகிழ்ச்சி’ என்ற மனிதன் கடவுளிடம் விடை பெற்றுச் சென்றான்.

கடவுளிடம் வரம் பெற்ற நாளிலிருந்து மனிதன் எண்பது ஆண்டுகள் வாழத் தொடங்கினான். முதல் முப்பது ஆண்டுகள் அவன் அறிவுள்ளவனாக, வீரனாக, பயனுள்ளவனாக, மகிழ்ச்சியாக வாழ்ந்தான். அடுத்த பன்னிரெண்டு ஆண்டுகள் குடும்ப சுமையை சுமக்கிறான். அதற்குப் பின்வரும் பதினெட்டு ஆண்டுகள் தான் சேர்த்து வைத்த பொருட்களை, குடும்பத்தை காவல் காக்கிறான். இறுதியாக இருபது ஆண்டுகள் உடல் வலுவிழந்து, முதுமையடைந்து உணவுக்கும், உடல் நலத்திற்கும் அலையாய் அலைகிறான். ■

இயக்கச் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்ட மாதாந்திர ஆய்வுக் கூட்டம் சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கத்தில் 08.05.2015 மற்றும் 09.05.2015 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. ட்டி. ஆர். வேதநாயகம், திருமதி. எம். மாதவி ஆகியோர், அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர்களிடம் இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினர்.

இந்த ஆய்வின்போது, தனிநபர் கழிப்பறை மற்றும் ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை விளக்கக் கூட்டம் மற்றும் கலந்துரையாடல் நடைபெற்றது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் கூடுதல் இயக்குநர் (சுகாதாரம்) திரு. கோ. இலட்சுமிபதி, திரு. கா. ராமமூர்த்தி (ஆலோசகர், தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாடு – சுகாதாரம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், ஊரகப் பகுதிகளில் தனிநபர் கழிப்பறை மற்றும் திடக் கழிவு மேலாண்மை ஆகியவற்றின் செயலாக்கத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சுகாதார தூதுவர்களின் பங்களிப்பு குறித்தும், திட்டத்தினை விரைவாக செயல்படுத்துதல் குறித்தும், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் அவர்களும், திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை ஒழிக்கும் விதமாக தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் திட்டத்தினை செயல்படுத்தவும், அரசு வழங்கும் மானியங்கள் குறித்தும், களப்பணியாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டும் நெறி முறைகளையும், சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் இயக்குநர், அவர்களும் விரிவாக எடுத்துரைத்தனர். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் கூடம்

படகுக் கட்டும் தொழிற்கூடம்

படகு இஞ்சின் பழுது நீக்கும் கூடம் துவக்க விழா

கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் படகு பழுது பார்க்கும் மற்றும் படகு கட்டும் கூடம் மிகவும் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் இதனைச் சுற்றியுள்ள மீன்பிடி கிராமங்களில் உள்ள படகுகள் மிகவும் துரிதமாகவும் தரமான முறையிலும் பழுது நீக்கவும், தரமான படகுகள் உற்பத்தி செய்யவும் ஏற்றதாக அமைந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் மூலம் இனையம் கடற்கரைப் பகுதியில் மீனவ மக்கள் பயன் பெறும் வகையில், படகுக் கட்டும் கூடம், படகுத் துறை அலுவலகக் கட்டிடம் மற்றும் மீன்பிடி படகு எஞ்சின் பழுது பார்க்கும் கூடம் ஆகியவை ரூ. 23,12,000/- மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, எஞ்சின் பழுது பார்க்கத் தேவையான உபகரணங்கள், தளவாட சாமான்கள் ஆகியவற்றை ரூ. 17,06,000/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள் 25.04.2015 அன்று மேற்குறிப்பிட்ட கட்டிடங்களை திறந்து வைத்து படகுத் துறை எஞ்சின் பழுது பார்க்கும் பணியினை துவக்கி வைத்தார். இந்தப் படகு பழுது பார்க்கும் மற்றும் படகு கட்டும் கூடம் மிகவும் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் இதனைச் சுற்றியுள்ள மீன்பிடி கிராமங்களில் உள்ள படகுகள் மிகவும் துரிதமாகவும் தரமான முறையிலும் பழுது நீக்கவும், தரமான படகுகள் உற்பத்தி செய்யவும் ஏற்றதாக அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. எஸ். உமாமகேஸ்வரி, உதவி செயற்பொறியாளர் திருமதி. என். நித்தியகல்யாணி மற்றும் மீனவ கூட்டுறவு சங்கங்களின் தலைவர், தென்னிந்திய மீனவர் கூட்டமைப்பு தலைவர் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்கள் தங்களின் மீன்பிடி கருவிகள், உபகரணங்கள், படகுகள் பழுத நீக்குதல் மற்றும் புதிய படகுகள் வாங்க வெளி மாநிலங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள இந்த தொழிற்கூடம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வழிவகை செய்யும். ■

இந்தப் படகு பழுது பார்க்கும் மற்றும் படகு கட்டும் கூடம் மிகவும் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. **விக்ரம் கபூர்**, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்
திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம்

செயல்படுத்தப்படும் குறுந்தொழில்கள்

தங்களின் குடும்ப வாழ்வதாரம் உயர்ந்துள்ளது என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களில் இணைந்துள்ள அனைத்து குழு உறுப்பினர்களும் வருமானம் ஈட்டக் கூடிய தொழில் சார்ந்த பயிற்சிகளைப் பெற்று, வங்கிகள் மூலமாகக் கடன் வாங்கி சிறப்பாக தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் கீழ் 3 முதல் 5 உறுப்பினர்கள் இணைந்து கூட்டுப் பொறுப்புக் குழுக்களாக, சிறு குறுந்தொழில்களை வெற்றிகரமாக செய்து வருகின்றனர். கூட்டுப் பொறுப்புக் குழுக்களில் இணைந்துள்ள அனைத்து குழு உறுப்பினர்களுக்கும் வருமானம் ஈட்டக் கூடிய தொழில் சார்ந்த பயிற்சியை அளித்து, வங்கிகள் மூலமாகக் கடன் பெற்றுத் தந்து சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

இத்திட்டத்தில் கூனிமேடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து செவிடங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. ஜெயா, திருமதி. சுந்தரி மற்றும் திருமதி. சிவலட்சுமி ஆகிய மூன்று பயனாளிகளும் இணைந்து கடந்த 18.04.2015 அன்று JSS கறவை மாடு வளர்ப்பு தொழிலைத் தொடங்கினர். இவர்களுக்கு PTSLP திட்ட நிதி ரூ. 70,466/– NABARD வங்கிக் கடன் ரூ. 2,11,399/– மற்றும் பயனாளி பங்குத் தொகையாக ரூ. 14,835/– ஆக மொத்த குறுந்தொழில் திட்ட கடனாக ரூ. 2,96,700/– வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் தினமும் சராசரியாக 32 லிட்டர் பால் விற்பனை செய்கின்றனர். இதுவரை ரூ. 85,939/– கடனை திருப்பி செலுத்தியுள்ளனர். இத்தொழிலின் மூலம் இதுவரை 2,21,281/– வருமானம் கிடைத்துள்ளது. அதுமட்டுமின்றி கால்நடை கழிவுகளை இயற்கை உரமாக்கி நல்ல விலைக்கு விற்கின்றனர்.

இந்தக் கூட்டுப் பொறுப்புக் குழு தொழிலின் மூலம் தங்களின் குடும்ப வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர். இந்த அரிய வாய்ப்பை தங்களுக்கு அளித்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

இத்திட்டத்தில் கூனிமேடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து செவிடங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. ஜெயா, திருமதி. சுந்தரி மற்றும் திருமதி. சிவலட்சுமி ஆகிய மூன்று பயனாளிகளும் இணைந்து JSS கறவை மாடு வளர்ப்பு தொழிலைத் தொடங்கினர்.

சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்ட செயலாக்கம் குறித்த விளக்கக் கூட்டம்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு

திட்ட செயலாக்கம் (2015–16) குறித்த விளக்கக் கூட்டம்

சென்னையில் நடைபெற்ற திட்ட செயலாக்கம் குறித்த விளக்கக் கூட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் முடிவடைந்த பிறகும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வலிமையுடன் திகழ திட்டத்தின் மூலமாக என்னென்ன வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறித்து விளக்கிக் கூறப்பட்டது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டப் பகுதிகளான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

அவற்றை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு திட்டப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இருந்தும் இரண்டு நபர்கள் வீதம் 218 நிர்வாகிகளுக்கு 20.04.2015 அன்று ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு திட்ட செயலாக்கம் குறித்த விளக்கக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் திட்ட மேலாண்மை அலகின் அலுவலர்கள் மற்றும் மாவட்ட செயலாக்க அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திட்டத்தின் கீழ் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வருமானத்தை பெருக்கவும், கூட்டமைப்புகளுக்கு நிலைத்த் தன்மையை ஏற்படுத்தவும், திட்டத்தின் உதவியில்லாமல் கூட்டமைப்புகள் தன்னிச்சையாக செயல்பட என்னென்ன வழிமுறைகள் கையாள வேண்டும் என்பது குறித்த ஆலோசனைகளை திட்ட கூடுதல் இயக்குநர் அவர்கள் வழங்கினார்.

மேலும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் முடிவடைந்த பிறகும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வலிமையுடன் திகழ திட்டத்தின் மூலமாக என்னென்ன வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறித்தும், மேலும் கூட்டமைப்புகள் எவ்வாறு சிறந்த முறையில் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல திட்டமிடுவது என்பதைப் பற்றியும் முதுநிலை ஊரக நிதி மேலாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மேலாளர்கள் விவரித்தனர்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து ஆண்டு வணிகத் திட்டத்தை (Annual Business Plan) தயார் செய்து விளக்கிக் கூறினார்கள். இறுதியாக ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் இரண்டு கூட்டமைப்பு பிரதிநிதிகளிடம் கருத்துக்களைக் கேட்டதில், ‘இக்கூட்டத்தில் கலந்து கொண்டது மிகவும் பயனுள்ளதாக இருந்தது’ என்று பிரதிநிதிகள் கூறினார்கள். ■

வருமானத்தைப் பெருக்கும்

தொழில்களுக்கான பயிற்சிகள்

இத்தகைய பயிற்சிகளின் வாயிலாக மேலும் சிறப்பாக செயல்பட முடியும்.

இதுபோன்ற பயிற்சிகளின் மூலம் கிராமப்புறத்தில் வசிப்பவர்கள் சிறந்த பயன்னகளைப் பெறுவதுடன், கறவை மாடு வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் பெற்று தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதால், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் இத்தகையப் பயிற்சிகளை பல்வேறு மட்டங்களில் வழங்கி வருகிறது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வருமானத்தைப் பெருக்கிட பல திட்டங்கள் மற்றும் பயிற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் கால்நடை வளர்ப்புப் பயிற்சி. நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஹேண்ட் இன் ஹேண்ட் என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் 6 நாட்களைக் கொண்ட பயிற்சி 17 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலம் பயன் பெற்ற பயனாளி கவிதா தன் அனுபவங்களைக் கூறுகிறார்.

'என்னுடைய பெயர் எம். கவிதா. நான் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவள். நாகப்பட்டினம் மாவட்டம், தென்னாபட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறேன். எங்களைப் போன்றவர்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் சார்பில் ஹேண்ட் இன் ஹேண்ட் தொண்டு நிறுவனத்தின் மூலமாக, திரு. சிவசண்முகம் என்பவரால் 'மாடு வளர்ப்பு மற்றும் பால் விற்பனை தொடர்பான தொழில் பயிற்சி' வழங்கப்பட்டது.

பயிற்சியின் போது கறவை மாடு வளர்ப்பு, கால்நடைகளுக்கு வரும் நோய் தடுப்பு முறைகள், நோய்களுக்கான மருத்துவம், கால்நடை பராமரிப்பு முறைகள், பசுந்தீவனம், புண்ணாக்கு, தீவன புல் போன்றவை அளிக்கும் முறை, அசோலா பாசி வளர்ப்பு முறை போன்ற சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

மேலும் பயிற்சியில் பால் மூலம் தயிர், வெண்ணெய், பால்கட்டி போன்றவை நேரடியாக தயாரித்து காண்பித்தது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பால் உற்பத்தியை பெருக்கும் முறை, பால் விற்பனையில் நேரடி விற்பனை மற்றும் கூட்டாக சேர்ந்து விற்பனை செய்தல், பால் உற்பத்தியில் மதிப்புக் கூட்டு செய்தல் அதாவது பால்கோவா, தயிர், பாதாம் பால் ஆகியவை மூலமாக வருமானத்தைப் பெருக்குதல் போன்றவை குறித்து காணொளி மூலமாகவும் விளக்கங்கள் அளிக்கப்பட்டது. பயிற்சியின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேலும் கால்நடை வளர்ப்பு குறித்த புத்தகங்கள், மதிய உணவு, தேனீர் ஆகியவையும் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சிக்கு முன்னர் கால்நடை வளர்ப்பு குறித்து தெரியாமல் இருந்த நாங்கள், பயிற்சிக்குப் பின்னர் சிறந்த முறையில் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதியினை எடுத்துக் கொண்டோம்.

இதுபோன்ற பயிற்சியின் மூலம் எங்களைப் போன்ற கிராமப்புறத்தில் வசிப்பவர்கள் சிறந்த பலன் பெறுவதுடன், கறவை மாடு வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் பெற்ற எங்களது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்று நம்புகிறோம். மேலும் இப்பயிற்சியினை அளித்தன சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– எம். கவிதா, சுய உதவிக் குழு உறுப்பினர்,
தென்னாபட்டினம் ஊராட்சி கூட்டமைப்பு

பயிற்சிக்குப் பின்னர் சிறந்த முறையில் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற உறுதியினை எடுத்துக் கொண்டோம்.

சமையல் எரிவாயு விபத்துக் காப்பீடு...

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் விநியோகிக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டால் ரூ. 50 இலட்சம் வரை காப்பீடு வழங்கும் திட்டம் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. ஆனால் காப்பீடு தொகையை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு இல்லை.

எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தும் ஒவ்வொரு நுகர்வோருக்கும் எண்ணெய் நிறுவனங்கள் காப்பீட்டுத் தொகையை காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தி வருகின்றன. எதிர்பாராத விதமாக சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டால், விபத்து நடந்த இடத்தில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்வார்கள். விபத்தின் பாதிப்பு எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு காப்பீடு தொகை வழங்கப்படும். இதுபோன்ற ஆய்வுகள் நடைபெறவில்லை என்றால் பாதிக்கப் பட்ட நுகர்வோர் காஸ் ஏஜென்சியையோ அல்லது சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவனத்தையோ அணுகலாம்.

சமையல் எரிவாயு சிலிண்டர் விபத்தில் காப்பீடு பெறுவதற்கு சில விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. அதன்படி காஸ் சிலிண்டர் விபத்து சம்பந்தப்பட்ட நுகர்வோரின் வீட்டில் நடந்திருக்க வேண்டும். வீட்டுக்குப் பயன்படுத்தப்படும் சிலிண்டர் வணிக ரீதியாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கக் கூடாது. அதேபோல் கோவில் திருவிழா மற்றும் சுற்றுலா செல்லும் இடங்களுக்கு எரிவாயு சிலிண்டர் கொண்டு செல்லப்பட்டு விபத்து ஏற்படுதல், சமையல் அறை தவிர்த்து பிற இடங்களில் எரிவாயு சிலிண்டரை பயன்படுத்துவது , கூரை வீடுகளில் ஏற்படும் விபத்து போன்ற காரணங்கள் இருந்தால் காப்பீடு தொகை பெற முடியாது.

மேலும் நாம் பயன்படுத்தும் அடுப்பு, ரப்பர் டியூப், லைட்டர் உள்ளிட்ட பொருட்கள் ஐ.எஸ்.ஐ. தரச்சான்று பெற்றவையாக இருக்க வேண்டும். மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கியாஸ் ஏஜென்சியிடம் உரிய கட்டணம் செலுத்தி தரத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். இவை அனைத்தையும் முறையாக கடைப்பிடித்தால் மட்டுமே விபத்தின் தன்மையைப் பொறுத்து, 10 இலட்சம் ரூபாய் முதல் 50 இலட்சம் ரூபாய் வரை காப்பீடு பெற முடியும்.

சமையல் எரிவாயு சிலிண்டர் விபத்துகளை தவிர்க்கும் முறைகள்

1. டெலிவரி செய்யப்படும் சிலிண்டர் முறையாக சீல் செய்யப்பட்டுள்ளதா என்பதை கவனிக்க வேண்டும்.
2. சிலிண்டரையும் அடுப்பையும் இணைக்கும் ரப்பர் டியூப்பை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கட்டாயம் மாற்ற வேண்டும். தினமும் இரவில் படுக்கப் போகும் முன்பு ரெகுலேட்டரை ‘ஆஃப்’ செய்ய வேண்டும்.
3. மின்சார சுவிட்சைப் போடும் போது ஏற்படும் சிறிய தீப்பொறியே காஸ் தீப்பிடிக்கப் போதுமானது. எனவே காஸ் கசிவு ஏற்பட்டிருப்பதை அறிந்தால் மின் சுவிட்சைப் போடவோ, அணைக்கவோ கூடாது.
4. கசிந்த காஸ் வெளியேற கதவு, ஜன்னல் ஆகியவற்றை திறக்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.
5. கேஸ் கசிவு ஏற்பட்டு இருப்பதை அறிந்தால் உராய்வு ஏற்படும் எந்த செயலையும் செய்யாமல் மெதுவாக வீட்டிலிருந்து வெளியேறி, உடனடியாக தீயணைப்புத் துறையினரை தொடர்பு கொள்ள வேண்டும்.

காலாவதியான சிலிண்டர்களை அறிந்து கொள்ள...

கியாஸ் சிலிண்டர் விபத்துக்கள் நாள்தோறும் நடக்கின்றன. எரிவாயு சிலிண்டர்களை எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல் கையாள்வது மற்றும் காலாவதியான சிலிண்டர்களைப் பயன்படுத்துவது போன்ற காரணங்களால் பெரும்பாலும் கேஸ் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

காலாவதியான சிலிண்டர் என்றால் என்ன?

‘எரிவாயு நிரப்பும் தரத்துடன்தான் இந்த சிலிண்டர் இருக்கிறது’ என குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒவ்வொரு சிலிண்டரும் பரிசோதனை செய்யப்பட வேண்டும். அந்தச் சோதனையில் சிலிண்டரில் ஏதேனும் குறை இருப்பது தெரிய வந்தால், அது சரி செய்யப்பட்டு இந்தியத் தர நிர்ணய அமைப்பு (Bureau of Indian Standards - BIS) சான்று அளித்த பின்னரே, மீண்டும் பயன்பாட்டுக்கு விட வேண்டும்.

காலாவதியான சிலிண்டரை அறிந்து கொள்வது எப்படி?

சமையல் எரிவாயு சிலிண்டரின் தலைப்பகுதியில் மூன்று கம்பிப் பட்டைகள் இருக்கும். இந்தப் பட்டைகளில் ஒன்றின் பக்கவாட்டில் சிலிண்டரின் எடை குறித்த விபரங்கள் இருக்கும். இன்னொன்றில் சிலிண்டரின் காலாவதி தேதி குறித்த எண்கள் சுருக்கெழுத்தில் குறிக்கப்பட்டிருக்கும். உதாரணமாக ஜனவரி முதல் மார்ச் வரையிலான மாதத்தைக் குறிக்க **A** என்ற எழுத்தும், ஏப்ரல் முதல் ஜூன் வரை **B** என்ற எழுத்தும், ஜூலை முதல் செப்டம்பர் வரை **C** என்ற எழுத்தும் மற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மாதத்திற்கு **D** என்ற எழுத்தும் குறிக்கப்பட்டிருக்கும். நீங்கள் வாங்கும் சிலிண்டரில் **B** என்ற எழுத்தும் அதன் அருகில் 16 என்ற எண்ணும் (**B**-16) குறிக்கப்பட்டிருந்தால், அந்த சிலிண்டரின் காலாவதி தேதி 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்று அர்த்தம். இந்தத் தேதிக்குப் பின்னர் சிலிண்டரை பயன்படுத்துவது பாதுகாப்பானது அல்ல. ■

கேரளத்தில் செயல்பட்டு வரும் 'குடும்பஸ்திரி' அமைப்பின் செயல்பாடுகள் பார்வையிடல்

களப் பயணம்

புதுவாழ்வு திட்ட இயக்குனர் மற்றும் தேசிய வள மையக் குழுவினரின் பட்டறிவுப் பயணம்

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தமிழ்நாட்டில் புதுவாழ்வு திட்டம், கேரளத்தில் குடும்பஸ்திரி ஆகிய நிறுவனங்கள் தேசிய அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்நிறுவனங்கள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்பட்டு வரும் அனைத்து மாநிலங்களிலும் பெண்கள் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு போன்ற சிறப்பான செயல்பாடுகளை செயல்படுத்த தேசிய வள மையங்கள் உதவி செய்து வருகின்றன.

தமிழ்நாடு மாநில புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேசிய வள மைய அணியினர் 24.04.2015 மற்றும் 25.04.2015 ஆகிய தேதிகளில் கேரள மாநிலம், திருவனந்தபுரம் 'குடும்பஸ்திரி' தேசிய வள மையத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர். தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தமிழ்நாட்டில் புதுவாழ்வு திட்டம், கேரளத்தில் குடும்பஸ்திரி ஆகிய நிறுவனங்கள் தேசிய அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்நிறுவனங்கள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்பட்டு வரும் அனைத்து மாநிலங்களிலும் பெண்கள் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு போன்ற சிறப்பான செயல்பாடுகளை செயல்படுத்த தேசிய வள மையங்கள் உதவி செய்து வருகின்றன.

தமிழகத்தில் செயல்படும் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பிற மாநிலங்கள் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் மற்றும் அலுவலர்கள் குழு, தேசிய வள மையம் சார்பில் களப்பயணம் மற்றும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இந்த பட்டறிவு பயணத்தில் 'குடும்பஸ்திரி' இயக்குநருடன், புதுவாழ்வு திட்ட இயக்குநர் அவர்களும், தேசிய வள மையத்தின் அணியினர் மற்றும் அலுவலர் குழுவினர் சிறப்பு செயல்பாடுகளைப் பகிர்ந்து கொண்டு, கேரளா, தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் மிகச் சிறந்த முன்னேற்ற பாதையில் செல்வது குறித்து கலந்துரையாடல் செய்தனர். மேலும் குடும்பஸ்திரி அமைப்பின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு தொழில்களை பார்வையிட்டு, அவற்றை மேற் கொண்டு வரும் குழுக்களின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டன. ■

குடும்பஸ்திரி அமைப்பின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்களை பார்வையிட்டு அவற்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் ஆய்வு

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள்

கூடுதல் திட்ட இயக்குநர் ஆய்வு

கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், கூட்டமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் உள்ள 18 களப்பகுதிகளின் நிதி வரவு செலவின திட்டத்தினை கேட்டறிந்து, முறையாக செயல்பட அறிவுறுத்தினார். தகுதியான மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கு தனிநபர் கடன் வழங்கும் நடவடிக்கைகளை அணித்தலைவர்கள் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கண்காணிக்க அறிவுறுத்தினார். மேலும் மலையனூர் ஊராட்சி கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் ஒத்தத் தொழில் குழு ஆகியவற்றின் செயல்பாடுகளை கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்தார். தூய்மை கிராமம் குறித்த செயல்பாடுகள், தனிநபர் கழிவறை கட்டுதலின் அவசியம், அதற்கான மானியம் போன்றவை குறித்த ஆலோசனைகளையும் வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் மேதினக் கொண்டாட்டம்

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், கள்ளிப்பட்டு ஊராட்சியில் புதுவாழ்வு திட்டம் மற்றும் ஊராட்சி மன்றம் சார்பில் மேதின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் முதல் நிகழ்ச்சியாக நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாநில புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கள்ளிப்பட்டு ஊராட்சியில் திறந்தவெளி மலம் கழித்தலை முற்றிலும் ஒழித்திடும் வகையில், திறந்தவெளி மலம் கழித்திடும் இடங்களைக் கண்டறிந்து அந்த இடங்களில் அமைக்கப்பட்டிருந்த புதுவாழ்வு பூங்காக்களை கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். நித்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கள்ளிப்பட்டு ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 106 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் உதவியாக 15 இலட்சம் ரூபாய், சிறப்பாக செயல்படும் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்திற்கு பரிசுகள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கள்ளிப்பட்டு ஊராட்சி மன்ற தலைவி திருமதி. மங்கலட்சுமி, கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி. ஷர்மிளா நெடுஞ்செழியன், கண்டமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. வி. முத்துராமன், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. டி. சீனுவாசன், திரு. மாரீஸ்வரன், திரு. எம். ராஜா, திரு. பி. வினோத்குமார் மற்றும் திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதுவாழ்வு திட்ட சுகாதார பூங்காக்களை கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் திறந்து வைத்தார்.

சேலம் மாவட்டம்

புதுவாழ்வு திட்டத்தின் வாயிலாக வளம் பெற்று வரும் பழங்குடி மக்கள் குழுக்கள்

நாற்றங்கால் உற்பத்தில் விவசாய குழுக்கள்

ஆரம்ப காலங்களில் பழங்குடியின மக்கள் விவசாயத்திற்கான நாற்றங்கால்களை வெளியூர்களுக்கு சென்று வாங்கி வந்தனர். இதனால் செலவும் காலவிரயமும் ஏற்பட்டது. இதைத் தவிர்க்கும் வகையில் தற்போது பழங்குடியினர் பகுதிகளில் நாற்றங்கால் பண்ணை ஏற்படுத்தி நியாய விலையில் நாற்றங்கால்கள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டமானது, அயோத்தியாப் பட்டணம், பெத்தநாயக்கன்பாளையம், கெங்கவல்லி, தலைவாசல், வாழப்பாடி மற்றும் ஏற்காடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், கருமந்துறை மற்றும் பனைமடல் களப்பகுதிகளில் ஏழு விவசாய ஒத்த தொழில் குழுக்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இந்த ஒத்த தொழில் குழுக்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒத்த தொழில் கூட்டமைப்பாக மாற்றப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டு வருகிறது. இத்தொழில் கூட்டமைப்பிற்கு ஆரம்பகட்ட நிதியாக ரூ. 29.77 இலட்சம் மாநில அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலமாக மக்களுக்கு இயற்கை வேளாண்மையின் அவசியம் பற்றி கலைக்குழுக்கள், சுவர் விளம்பரங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப காலங்களில் பழங்குடியின மக்கள் விவசாயத்திற்கான நாற்றங்கால்களை வெளியூர்களுக்கு சென்று வாங்கி வந்தனர். இதனால் செலவும் காலவிரயமும் ஏற்பட்டது. இதைத்தவிர்க்கும் வகையில் தற்போது பழங்குடியினர் பகுதிகளில் நாற்றங்கால் பண்ணை ஏற்படுத்தி நியாய விலையில் நாற்றங்கால்கள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காகவும் தேங்காய் நார் கழிவுகள் வெளியிடங்களில் இருந்த வாங்கப் பட்டது. தற்போது இப்பகுதிகளிலேயே மண்புழு உரம் தயாரிக்கப்படுகிறது. பழங்குடியின மக்களின் விவசாயத்தை மேம்படுத்த தொழில்நுட்ப யுத்தியாக மூடாக்கு முறையில் தக்காளி சாகுபடி செய்ய மாதிரி பண்ணை அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

பழங்குடியின மக்களின் விவசாயத்தை மேம்படுத்த தொழில்நுட்ப யுத்தியாக மூடாக்கு முறையில் தக்காளி சாகுபடி செய்ய மாதிரி பண்ணை அமைக்கப்பட்டுள்ளது .

புதுவாழ்வு திட்டம் சார்பில் இயற்றப்பட்ட இரண்டு நாடகங்கள் முற்றம் இதழில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. கடந்த இதழ்களில் முற்றத்தில் இடம் பெற்ற பூக்கள் நாடகத்தின் இறுதி பகுதியினை இந்த இதழில் காணலாம்.

இதுவரை...

8ஆம் வகுப்பு படிக்கும் இளவரசி சில நாட்களாக யாரிடமும் பேசாமல் எதையோ பறிகொடுத்தது போல் இருக்கிறாள். இதைக் கண்ட பெற்றோர் அவளின் பள்ளி ஆசிரியரிடம் இது குறித்து கேட்கின்றனர். ஆனால் இளவரசிக்கு என்ன பிரச்சனை என்று ஆசிரியருக்கும் தெரியவில்லை. இளவரசியின் தோழியிடம் விசாரிக்கும் போது பள்ளியில் நடந்த விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட இளவரசி, ஓட்டப் பந்தயத்தில் ஓடும்போது கால் தடுக்கி விழுந்து விடுகிறாள். இதைக்கண்டு அனைவரும் சிரிக்கின்றனர். அவமானம் அடைந்த இளவரசி ஆசிரியரிடம் மீண்டும் போட்டியில் கலந்து கொள்ள வாய்ப்பு கேட்கிறாள். ஆனால் ஆசிரியர் அனுமதிக்க மறுக்கிறார். இதனால் மனச்சோர்வு அடைகிறாள் இளவரசி. இதை அறியாமல் அவளின் பெற்றோர், பூசாரியிடம் அழைத்துச் செல்கின்றனர். பூசாரியோ இளவரசிக்கு பேய் பிடித்துள்ளதாகவும், அதை விரட்டு வதாகக் கூறி இளவரசியை அடித்து துன்புறுத்துவதுடன், பணம், ஆடு, கோழி போன்றவற்றைக் கேட்கிறான்.இந்நிலையில் இளவரசியின் வீட்டு தொலைக்காட்சியில், மனநல மருத்துவர் ஆலோசனை குறித்த செய்தி ஒளிபரப்பாகிறது. இதைக் கேட்ட இளவரசியின் பெற்றோர், மருத்துவரிடம் இளவரசியை அழைத்துச் செல்கின்றனர். மனநல மருத்துவர் இளவரசியை பரிசோதித்து பார்த்து விட்டு, இளவரசியின் பிரச்சனைக்குக் காரணம் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சிதான் என்று சொல்லி, இளவரசிக்கு சிகிச்சை அளிப்பதுடன், அவளின் பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் ஆலோசனைகள் வழங்குகிறார்.

இனி...

பெற்றோர்: இவ்வளவு நேரம் நாடகம் நடிச்சோம் இல்ல. இந்த பள்ளியில் ஒரு குழந்தையோ அல்லது டீச்சரோ வந்து இது மாதிரி குழந்தைகள் இருந்தா, அவர்களுக்கு ஆலோசனையும் ஆதரவும் கொடுப்போம் என்று சொன்னா நாடகத்தை முடித்து விடுகிறோம்.

இளவரசி : முதல்ல நான் சொல்றேன்... இப்ப நான் ரொம்ப தெளிவாயிட்டேன். இதுவரைக்கும் நிறைய போட்டியில கலந்து கிட்டு நிறைய பரிசுகள் வாங்கியிருக்கேன். இந்த ஒரு முறை என்னால சரியா செய்ய முடியல. வாழ்க்கையில வெற்றி தோல்வி இரண்டுமே வரும் போகும். அத சாதாரணமா எடுத்துக்கணும். இதனால என் பெற்றோருக்கும் கஷ்டம், ஆசிரியர்களுக்கும் கஷ்டம், என் கூட படிக்கிற நண்பர்களுக்கும் கஷ்டம். இனிமே பிரச்சனையையும் கூட சாதாரணமாக எடுத்துக்குவோம். இப்ப எனக்கு யாரிடம் ஆலோசனை கேட்கணும், எப்படி ஆலோசனை பெறணும்னு தெரிஞ்சிக் கிட்டேன். என்னைப் போல யாராவது இது போல இருந்தாலும் கண்டிப்பாக உதவி செய்வேன்.

குழந்தை–1: நான் இனிமே யாரையும் கேலி, கிண்டல் செய்ய மாட்டேன்.

குழந்தை–2 : இனிமே அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, என் சக நண்பர்களை மதித்து நடப்பேன்.

குழந்தை–3: இனிமே இது மாதிரி பிரச்சனை இருந்தா எங்க டீச்சர் அல்லது பெற்றோரிடம் கூறுவோம்.

(அனைவரும் சேர்ந்து)

இதுபோன்ற பிரச்சனைகளுக்கு உங்கள் ஊரில் உள்ள புதுவாழ்வு திட்டம், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தை அணுகவும். அதோட குழந்தைகளுக்கான இலவச தொலைபேசி எண் 1098 என்ற எண்ணையும், 104 என்ற மருத்துவ உதவி தொலைபேசி எண்ணையும் அழைத்து தேவையான மனநல ஆலோசனைகளைப் பெறலாம். ■

(பூக்கள் நாடகம் முடிவுற்றது)

பூக்கள்

தடகளப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கான பாராட்டு விழா

உத்திரபிரதேச மாநில பாரா ஒலிம்பிக் கமிட்டி சார்பில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தமிழகத்தின் சார்பில் 47 வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இதில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் 8 மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் ஓட்டம், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், உயரம் தாண்டுதல் மற்றும் நீளம் ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு, 8 தங்கம், 8 வெள்ளி மற்றும் 4 வெண்கலம் என மொத்தம் 20 பதக்கங்களை வென்றுள்ளனர். பதக்கங்களை வென்று தமிழகத்திற்கும், புதுவாழ்வுத் திட்டத்திற்கும் பெருமை சேர்ந்த வீரர் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களுக்கென அங்கீகாரம் கொடுக்கும் வகையிலும் பாராட்டு விழா நடைபெற்றது. 17.04.2014 அன்று சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் கலந்து கொண்டு, வீரர் வீராங்கனைகளுக்கு சான்றிதழ், டிராவல் பை, பொன்னாடை போன்றவைகளை வழங்கி வாழ்த்தினார். ■

பெண்ணே...! நீ வாழிய பல்லாண்டு...!!!
இறைவன் தந்த இனிய பரிசே!
பெண்ணே உன்னை ஈன்றெடுத்த
அன்னைக்கு நீ தலைவணங்கு!
அன்று முதல் இன்று வரை - பெண்ணே
உனக்கு கணக்கில்லை உவமைகள்!
அன்பில் நீ அட்சய பாத்திரம்...
சேவையில் அன்னை தெரசா...
வீரத்தில் ஜான்சி ராணி...
பொறுமையில் பூமித்தாய்...
என பெண்ணே நீ வடிவெடு!
பாரதியின் கூற்று போல
நிமிர்ந்த நன்னடையும்
நேர்கொண்ட பார்வையுமாய்
உன் பயணம் தொடரும் போது
வானத்தையும் தொட்டு விடும்!
பெண்ணே... நீ வாழிய பல்லாண்டு...!

பி. பானுப்பிரியா,
கண்காணிப்பாளர்,
புதுவாழ்வு திட்ட மாநில அலுவலகம்,
சென்னை.

தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனைத்து கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களிலும் மாதிரி கழிப்பிடங்கள் கட்டுவற்கான பூமி பூஜை போடப்பட்டது. மேலும் அனைத்து ஊராட்சிகளிலு மரக்கன்றுகள் நடப்பட்டன.

புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் நிதி உதவி

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு மற்றும் நரிக்குடி ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 165 ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் வாயிலாக பல்வேறு வறுமை ஒழிப்பு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 01.05.2015 அன்று விருதுநகர் மாவட்டம் முழுவதும் நடைபெற்ற கிராம சபை நிகழ்ச்சிகளில் 746 மாற்றுத் திறனாளிகள், 850 நலிவுற்றோர்களுக்கு தனிநபர்கடனாக 149.25 இலட்சம் ரூபாயும், கூட்டமைப்புகளின் சார்பாக 309 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 1210 உறுப்பினர்களுக்கு அமுதசுரபி நிதியாக 242 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் புதுவாழ்வு திட்ட மாநில வல்லுநர் திரு. கருப்பசாமி, மாவட்ட திட்ட மேலாளர் திரு. சண்முகராஜ், உதவித் திட்ட மேலாளர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், களப் பணியாளர்கள், கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பூச்சரத்தின் உறுப்பினர்களுக்கு இந்த இயந்திரம் பயனுள்ளதாகும்.

கால்நடை பராமரிப்பில்

சிறிய அரவை இயந்திரம்

கறவை மாடு வளர்ப்பு தற்போது ஒரு சிறந்த வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. புதுவாழ்வு திட்டம் பூச்சரங்களில் 40 சதவிகிதத்திற்கும் மேல் கறவை மாடு பூச்சரமாகவே உள்ளன. 20 சதவிதம் ஆடு வளர்ப்பு பூச்சரங்கள் உள்ளன. இந்நிலையில் உற்பத்தி செலவினைக் குறைத்து, வருவாயினை அதிகரிப்பதே இத்தொழிலின் முக்கிய குறிக்கோளாக இருப்பது அவசியம்.

பூச்சரங்களின் உறுப்பினர்கள் தங்களுக்குத் தேவையான தீவனத்தினை தாங்களாகவே தயாரிக்கும் போது, பால் உற்பத்தி செலவினைக் குறைக்க முடியும். ஆகவே பூச்சரங்களின் உறுப்பினர்கள் சிறிய அளவு தீவன இயந்திரத்தினைப் பயன்படுத்துவது மிகவும் உபயோகமாக இருக்கும்.

இவ்வகை இயந்திரங்கள் 15 குதிரை சக்தி கொண்டவை. இயக்குவதற்கு ஒருமுனை மின்சாரம் போதுமானது. ஒரு மணி நேரத்திற்கு சுமார் 35 முதல் 40 கிலோ தீவனம் அரவை செய்யலாம். நாளொன்றுக்கு 180லிருந்து 200 கிலோ தீவனம் உற்பத்தி செய்யலாம். ஒரு பூச்சரத்திற்குத் தேவையான தீவனத்தினை தயாரிக்கலாம்.

கறவை மாட்டுத் தீவனம் மட்டுமின்றி, ஆடுகளுக்கும் கோழிகளுக்கும் கூட இதில் தீவனம் தயாரிக்கலாம். இத்தீவன இயந்திரம் அமைக்க சுமார் ரூ. 20 ஆயிரம் வரை செலவாகும்.

இத்துடன் அரவை மற்றும் கலவை இயந்திரங்கள், சல்லடைகள் போன்றவையும் வாங்க வேண்டும். இவ்வகை இயந்திரங்கள் நாமக்கல் மற்றும் சென்னை ஆகிய பகுதிகளில் உள்ள இயந்திர உற்பத்தியாளர்களிடம் கிடைக்கும்.

கறவை மாட்டிற்கு ஒரு மாதிரி தீவனக் கலவை

தீவனக் கலவை	சதவிகிதம்
மக்காச் சோளம்	20
கம்பு	14
அரிசி தவிடு	20
கோதுமை தவிடு	10
கடலை பிண்ணாக்கு (எண்ணெய் எடுத்தது)	30
கடலை பொட்டு	3
தாது உப்பு	2
உப்பு	1

கிடைக்கும் பயன்கள்

3 லிட்டர் பாலுக்கு ஒரு கிலோ கிராம் வீதம் கொடுக்கலாம்

தீவன உற்பத்தி செலவு ஒரு கிலோவிற்கு குறைந்தது 2 ரூபாய் அளவிலாவது குறைய வாய்ப்புள்ளது

மேலும் இந்த தீவன இயந்திரத்தில் தாது உப்பு கலவையும் அரைத்து விநியோகிக்கலாம்.

ஒரு சுய வேலைவாய்ப்பாகவும் கருதலாம்.

இவ்வகை இயந்திரங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் பயிற்சி பெற
பேராசிரியர் மற்றும் தலைவர்,
ஊட்டச் சத்தியல் துறை,
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை–7,
என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

முனைவர் வெ. புருஷோத்தமன்,
வணிக மேம்பாட்டு மற்றும் கூட்டாண்மை வல்லுநர்,
புதுவாழ்வு திட்டம், சென்னை. ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (60,100 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

வங்கி சேவை
உங்கள் விரல் நுனியில்.
உங்களது மொபைல் எண்ணை பதிவு செய்யுங்கள் இப்பொழுதே!
092895
92895
என்ற எண்ணிற்கு
உங்கள் மொபைலில்
இருந்து ஒரு மிஸ்டுகால்
கொடுங்கள்.
உங்கள் கணக்கில்
இருக்கும் தொகையினை
உடனுக்குடன் அறியுங்கள்.
மொபைல் எண் பதிவு
குறித்து மேலும் விவரங்கள்
மற்றும் நிபந்தனைகளை
அறிய, உங்கள் அருகிலுள்ள
இந்தியன் வங்கியின்
கிளையை அணுகுங்கள்.
கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in
इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication 21.05.2015

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியம்

மலம் – வாய் வழி உள் சென்று நோய் பரவும் விதம்



கைகள் மூலம்

மலம் கழித்து உடலை சுத்தம் செய்த பிறகு கைகளை முறையாக சுத்தம் செய்யாமல் இருந்தால்

+

ஈக்கள் மூலம்

மலத்தில் அமரும் ஈக்கள் உணவிலும் அமர்ந்து உணவை மாசுபடுத்துவதால்

+

வளர்ப்பு பிராணிகள் மூலம்

வீட்டில் வளரும் கோழி, நாய் போன்ற வளர்ப்பு பிராணிகள் மலத்தை சாப்பிட்டபின் வீட்டிற்குள் வரும்பொழுது

காய், கனிகள் மூலம்

வயல் வெளிகளை திறந்த வெளிக் கழிப்பிடமாக பயன்படுத்துவதால் காய்கனிகள் மாசுபடுவதன் மூலம்

+

குடிநீர் மூலம்

ஆறு, குளம் இவற்றின் கரைகள் திறந்த வெளிக் கழிப்பிடங்களாய் பயன்படுத்தப்படுவதாலும் ஆறு மற்றும் குளத்தில் உள்ள தண்ணீரில் மலம் கழித்தவர்கள் உடலை சுத்தம் செய்வதாலும்

=

விளைவு

மலம், உணவு பொருட்கள், குடிநீர் மற்றும் காய்கனிகள் மூலம் வாய்வழியாக உட்சென்று நோய்பரவ ஏதுவாகிறது.

தவிர்க்கும் வழிமுறைகள்

மலம் கழிக்க கழிப்பறையையே பயன்படுத்துதல்

கைகளை சோப் உபயோகித்து சுத்தம் செய்தல்



பாதுகாக்கப்பட்ட குடிநீரை முறையாக சேமித்து பயன்படுத்துதல்



முறையாக உணவு சுத்தம் பேணுதல்